போன் நெ. 15. விலை 2 அணா REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 4—4—54 | இதழ் 40

ஆசாத் ஆவேசம்!

அவரா இப்படிப் பேசுகிறார்!—சாந்தசொரூபியாயிற்றே—சகலருக்கும் இதமாக நடந்துகொள்ளக் கூடியவராயிற்றே—எவ்வளவு கோபமாகப் பேசுகிறார்! கனல்பறக்கிறது கண்களில்—கதறுகிறாரே! கண்ணில் நீர் ததும்புகிறதே — எவ்வளவு கடுமையான வார்த்தைகளை வீசுகிறார்! "உங்களைப்போன்றோர் இருந்ததால்தான், பாகிஸ்தான் பிரிந்தது" என்று காங்கிரஸ்காரரைப் பார்த்து, கடுஞ்சொல் வீசுகிறாரே! கர்ஜனையன்றோ, புரிகிறார். இத்தனை, ஆத்திரத்தையும் இவ்வளவு நாள் எங்கே அடக்கிவைத்திருந்தார்! தூங்கும் புலி தொடைதட்டிக் கிளம்பியதுபோலிருக்கிறதே, பிரசங்கம்—"நான் 46-ஆண்டுகளுக்கு முன்பே என்னுடைய அரசியல் வாழ்வை நிர்ணயித்துக்கொண்டேன். அதன்படி, நடந்தும் வந்து விட்டேன். இன்னும் கொஞ்சநாள். சாவை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறேன். நான் தீர்ந்துபோன சடலம்! நான் எதற்காகவும் ஆசைப்படத் தேவையில்லை"—என்று கண்ணீர் கசிய முழக்கமிடுகிறாரே! ஆஹா—அருமையான பிரசங்கம்! இந்தி வெறியர்களுக்கு சரியான சாட்டை! 'ஆசாத், அச்சாஹை!'—என்றெல்லாம், உறுப்பினர்கள், வியப்பும் களிப்பும், எய்தும் வகையில் டில்லி மன்றத்தில், இந்தியக் கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத், முழக்கமிட்டிருக்கிறார், கடந்த 29-ந்தேதி.

அவரது பேச்சைப் படிக்கும்போதே, தீப்பொறியும் எரிமலையும், தென்படுகிறது. அந்தளவுக்குக் கோபம்! அதுவும், ஆசாதுக்கு!! யார்மீது? எதிர்க்கட்சிக்காரர்கள் மீதா—அல்ல, அல்ல — சொந்தக் கட்சியாம் காங்கிரசைச் சேர்ந்தவர்கள்மீது.

அவர்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார், 'ஐயனே! உங்களைப் போன்ற ஆசாமிகளால்தான், இந்தியா, துண்டாயிற்று. தெரியுமா?' என்பதாக. "குறுகிய மனோபாவமும், குதர்க்கபுத்தியும், காட்டினீர்கள் பெருந்தன்மை இல்லை, உங்களிடம். பிரிந்தது, இந்தியா. பின்னும் ஏன், உங்கள் புத்தி மாறவில்லை" என்று, கர்ஜித்திருக்கிறார்.

ஆசாத்—அமைதியாகவே இருந்து வருபவர். அவர், இந்தளவுக்கு எரிச்சலும் குமுறலும் பெறும்படிச் செய்தவர்கள், மூன்றுள் அகில இந்திய 'ராஷ்டிர பாஷை'—புருஷோத்தமதாஸ் தண்டனும், சேத் கோவிந்ததாஸ் என்பாருமாகும்.

இருவரும், ஆசாத்மீது, பழி சுமத்தினராம்.

'ஆசாத்—இந்தியைக் கவனிப்பதில்லை—இந்துஸ்தானியை வளர்க்கவே, சர்க்காரின்பணத்தையும் தன்னுடைய காலத்தையும் செலவழிக்கிறார்"—இதுவே, அவர்கள் வீசிய குற்றச்சாட்டு.

இதனைக்கேட்டதால்தான், ஆசாத், அடலேறென முழக்கமிட்டிருக்கிறார். "பாபாரேப — தக்கரயுள்," எனும் பதத்தையும், உபயோகித்திருக்கிறார். தவறான வழியில் மக்களின் கருத்தைக்கொண்டு செல்லுகிறார்கள்," என்பதே, இந்த இந்திச் சொல்லுக்குப் பொருளாம். இதுபோல கடுமையான இந்திச் சொற்களை எடுத்தெறிந்து, பார்லிமெண்டில், பதிலளித்தாராம். பிறகு இந்த வார்த்தையை, சபையின் கட்டளையின்பேரில், வாபசும் பெற்றாராம்! அந்தளவுக்கு, ஆசாத்மனக் கிலேசமும் ஆவேசமும் பெற்றிருக்கிறார், மேற்கண்ட குற்றச்சாட்டைக் கண்டதும்.

இந்தியைப் பரப்பவில்லை! இந்துஸ்தானியைப் பரப்புகிறீர்!!—இதில், என்ன இருக்கிறது, குற்றச் சாட்டு என்று, கேட்கலாம், நீங்கள். ஏனெனில் நம்மனோரில் இன்னும் பலர், இந்திக்கும் இந்துஸ்தானிக்குமிடையிலே உள்ள வித்தியாசத்தை அறியார். ஆனால், அதற்கிடையேயுள்ள வித்யாசமும், அதனால் ஏற்படும் தவறான அபிப்பிராயங்களும் மிக மிகப் பெரியவை என்று ஆசாத்தின் கோபத்தைக் கண்டபோது தான் தெரிகிறது! இல்லையென்றால் இந்தளவுக்கு அமைதியை இழப்

பாரா? கடுமையான சொல்லை, எடுத்தெறிந்து வாபஸ்பெறுவாரா!!

இந்திக்குச் செலவழிக்கவில்லை!— இவ்வண்ணம், அவர்கள் குற்றம் சுமத்தியிருந்தால்கூட, சாந்தமாகப் பதிலளித்திருப்பார், ஆசாத்.

ஆனால், அவர்கள் வீசிய குற்றச்சாட்டு, அதுவல்ல—இந்துஸ்தானிக்குச்செலவழிக்கிறார்!—என்பதாகும்.

இதை எப்படி ஒப்புவார், தாண்டனும், அவர் சகாக்களும்? ஆசாத் யார்—காந்தியாரின் சீடர், விடுதலை இயக்கத் தளபதி! வெள்ளைக்காரனிடமிருந்து தேசம் சுதந்திரமடைந்தபோது 'ராஷ்டிரபதி'யாக இருந்தவர், ஜெயில் சென்ற சிங்கம்—உங்களுக்கு. ஆனால், தாண்டனுக்கு! இத்தனை தியாகங்களைச்செய்திருந்தாலும்—முஸ்லீம் மக்களின் எசுதல்களைப் பொருட்படுத்தாது கொண்ட கொள்கைக்காக கூடாரத்தை விட்டு விலகாமல் 46 ஆண்டுகளாகக் காங்கிரசுக்குப் பாடுபட்டிருந்தாலும், ஆசாத் ஒரு, முஸ்லீம்! அவர்களுக்கு!!

ஒரே கட்சிதானே, இருவரும்—காங்கிரஸ்காரர்கள்தானே, என்பீர்கள். ஒரே கட்சியாயிருந்தாலென்ன! ஆசாத், முஸ்லீம்—தாண்டன், இந்து சம்மதிப்பாரா தாண்டன், தன்னுடைய கவுரவத்தை இழக்க! அதனால்தான், பாய்ந்திருக்கிறார். ஒரே கட்சி! ஆனாலும் இந்த வேற்றுமை!!—இதுதான், 'அந்த இடத்து' அழகு.

ஆசாத் முஸ்லிம்—எனவே, இந்துஸ்தானிமீது பற்றுக்காட்டுகிறார்—ஏனெனில், இந்துஸ்தானியின் எழுத்துகள் உருது மொழியிலுள்ளதைப் போன்றவை—ஆகவே, அவர் இந்துஸ்தானி வளர பணம் உதவுவது, உருதுவை வளர்க்க உதவி செய்வதாகும் ஒப்பமுடியுமா!—என்று கர்ஜிக்கிறார், தாண்டன்.

இந்தி—தேவநாகிரியின் எழுத்துக்களைக் கொண்டதாகும் இதுவே, இந்திய மொழி—இதனை வளர்க்காமல், இந்தி சங்கங்களுக்கு ஏராளமாகப் பணம் செலவிடாமல், இந்துஸ்தானி சங்கங்களுக்குப் பணம் அளிக்கலாமா? —'என்று, கேட்கிறார், தாண்டன்.

சாதாரணமான குற்றச்சாட்டா, இது? ஆசாத் செய்துள்ள தியாகம் என்ன! இன்றும் அவர் பெயரைக் கேட்டால், ஏளனம் செய்கிறது, முஸ்லீம் உலகு—எனினும் காங்கிரசிலிருந்து கடமையைச் செய்கிறார்—அவர்மீது, இந்தக் கறையைத் தடவுகிறார், தாண்டன். தாங்குவாரா ஆசாத்? யாரால் இயலும்! அதனால் தான். கண்ணீர் கசிய, கோபம் கொப்பளிக்க, குமுறி இருக்கிறார்! 'பர்பாரே தக்காயுள்' என்று பேசியிருக்கிறார்!! என்மீதா இந்தப் பழி? இனி எனக்கென்ன! — என்று, கர்ஜித்திருக்கிறார்.

காவடி அல்ல, ஆசாத்; கஷ்டநஷ்டங்களையேற்றவர். அவர்மீது, இக் குற்றச்சாட்டு! அதுவும் காங்கிரஸ் மெம்பரால்!! இந்தக் கோணல் மதியும், குரங்குப் புத்தியும், வட இந்திய காங்கிரஸ் முகாமினரின் சொந்தச் சொத்து. எனவே, இதனை விளக்க விரும்பவில்லை, நாம். ஆனால் இந்தத் தகராறு மூலம், கிடைக்கும் பொருளைக் காணத் தோருகிறோம்!

இந்துஸ்தானி! இந்தி !! — இரண்டுக்குமுள்ள வேற்றுமையே, நமக்குப் புரியாது. ஆனால், அங்கே இது ஒரு விபரீத பிரச்னையாகிக் கொண்டிருக்கிறது. எனினும், இந்திய பீடத்தினர், நாடு முழுமையும், அந்த மொழியினைப் பரப்பி—நானாவிதங்களிலும் முயற்சித்துவருகின்றனர்! இந்த முயற்சிகள் தீவிரமாகச் செய்யப்படவில்லை — என்பதே, தாண்டனாரின், கோபத்துக்குக் காரணம். காந்தியாரின் இருப்பிடமாயிருக்கும் வார்தாவில், காந்தியாரே துவங்கி வைத்த இந்துஸ்தானி சங்கம் ஒன்றுள்ளதாம். அதற்கு ஆசாத் ரூ60,000 நிதித் தொகை அளித்தாராம். அதேபோல பண்டித நேருவின் பாராட்டுதலையும் காந்தியாரின் ஆசிர்வாதத்தையும் பெற்ற இன்னோர் சங்கம் — உருது மொழியில அரிய நூல்களை வெளியிடுவதாம். அதற்கு ஆசாத் ரூ 40,000 அளித்தாராம். இது ஏன்?— கேட்கிறார், தாண்டன்! பழி சுமத்தியபடி கேட்கிறார்!!

காந்தியானாலென்ன! நேருவானாலென்ன!—எதற்கய்யா, அம்மொழிகளுக்கு, நிதி உதவி?—என்கிறார், தாண்டன்.

அந்தளவுக்கு, வெறி, ஆட்சிபுரிகிறது, அவர்களிடம்! அதனைக் கண்டதாலேயே, ஆசாத், சீறியிருக்கிறார், "பிறமொழிகளை அடக்கி, ஒடுக்கும் ஆசையுடன் நீங்கள் அலைகிறீர்கள். 'இப்படி அலைந்ததால்தான் பாகிஸ்தான் பிரிந்தது. ஏன், உருதுவுக்கும் இந்துஸ்தானிக்கும் பண உதவி என்று கேட்கிறீர்களே — இந்திய மண்ணில் அந்த மொழிகளைப் பேசும் 4½-கோடி முஸ்லீம்களிருக்கிறார்களே! அவர்கள் மொழியை உதாசீனம் செய்யவேண்டுமென்பது, உமது எண்ணமா!! என்று கேட்டிருக்கிறார். அவ்வண்ணம் ஆத்திரக் கனலைக் கக்கியபோது, ஆசாத் ஒரு உண்மையையும் வெளியிட்டிருக்கிறார்.

வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ.

தீட்டிய

பவழ பஸ்பம்

விலை அணா 4.

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால் வில்லைகள் அனுப்புக. 20 பிரதிகளுக்குமேல் பெறுவோருக்கு 25-சதவிகிதம் கழிவு உண்டு.

பரிமளம் பதிப்பகம்

காஞ்சிபுரம்

நம்மைப் பொறுத்த விஷயமாகும் அது.

தமிழில் கலைக்களஞ்சியம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றதல்லவா? இதற்கு நிதி உதவி கோரி, சென்னையார் விண்ணப்பித்திருந்தார்களாம்—1942-ல். இந்த விண்ணப்பத்துக்கெதிராக, வட இந்திய உறுப்பினர்கள் கூச்சலிட்டார்களாம்.

("The goverment had decided to give a grant of Rs 80,000 for its completion. But a lot of noise was created aganist it The sentiment was the same, namely, why give money for anything that did not relate to hindi")

"ரூ80,000 தரலாமென சர்க்கார் கூட முடிவுசெய்தது. ஆனால் அதை எதிர்த்து, ஏராளமானகூச்சல், எழுப்பப்பட்டது. இந்தியில்லாதவேறோரு மொழிக்கு எதற்காக பணம் உதவ வேண்டும் என்கிற எண்ணம்தான், காரணம்"

ஆசாத், கூறுகிறார்! ஏராளமான எதிர்ப்புக் கூச்சல், கிளப்பப்பட்டதாம். எங்கே? வடக்கே! அந்த மனப்பான்மையைக் கண்டிக்கிறார், ஆசாத்—அதுபோன்ற மனப்பான்மைதான், பாகிஸ்தான் பிரிவினைக்குக் காரணமெனச் சுட்டிக் காட்டிகிறார். மகிழ்கிறோம்! ஆசாத், உண்மையை அறிவித்தமைக்காக!!

இத்தகைய மனப்பான்மை கொண்டோர், இருக்கிறார்கள், வட இந்தியாவில்—இந்தியைத்தவிர எம்மொழியும் வளரக்கூடாது எனும் கருத்துடன். அவர்களின் போக்கை ஆசாத் கண்டிக்கிறார்! ஏசுகிறார்!! தன்மீது பழி சுமத்தும் அளவுக்கு அவர்களின் வெறி வளர்ந்து விட்டதைக் கண்டு கண்ணீர்வடிக்கிறார்.

ஆனால், அதே நேரத்தில், இன்னும் 12-ஆண்டுகளில் இந்தி எப்படியாவது டில்லி! சர்க்காரின் ஏடுகளிலும் நடைமுறைகளிலும் அமுலுக்கு வந்துவிடும் என்றும், தெரிவித்துள்ளார்.

12 ஆண்டுகளில், இந்தி அரசோச்சுமாம்! எங்கே? இந்துஸ்தானி—உருது தகராறு ஒரு பக்கம், வங்கம் சிந்தி மற்றோர் பக்கம், தமிழ் தெலுங்கு இன்னோர் பக்கம், என்று நானாவித மொழிகள் நடமாடும் இந்திய உபகண்டத்தின் அரசுமொழியாக வீற்றிருக்குமாம்.

அன்பர் ஆசாத் தெரிவிக்கிறார். மொழி வெறியால், பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டதென்பதைச்சுட்டிக் காட்டி, தாண்டனுக்குப் பதிலுரைத்த, ஆசாத், கடைசியில் இதனையும் தெரிவித்திருக்கிறார்.

பதினைந்து ஆண்டுகளில் இந்தியைப் பரப்புவதென்பது இந்திய அரசியலமைப்பில் வகுக்கப்பட்ட முடிவாகும் இதில் இப்போது மூன்றாண்டுகள் முடிந்துவிட்டன. இன்றும் பன்னிரண்டு ஆண்டுகளில் அரண்மனை மொழியாகுமாம், அது.

மொழி வெறியால், இந்தியா,துண்டாடப்பட்டது! — எனும் உண்மையை உரைத்தவரே, இதனையும் வெளியிடுகிறார் என்பதே, வியக்கச் செய்கிறது நம்மை.

எம்மொழியாயினும் அதனை அடக்கி, தமது மொழியாம் இந்தியை, தரணியாளும் நிலைமையில், உட்காரவைக்க வேண்டுமென தாண்டன் சொல்வது, மொழி வெறி. அதனைக்கண்டித்து, ஆனால், அரசாங்கம் இன்னும் பன்னிரண்டு ஆண்டுகளில் அரசு மொழியாகும் எனச் செப்புவது, என்ன வெறி?

வெறி!—சொல், சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம்.

ஏனெனில், நேரு பண்டிதரும் இந்த வெறியைக் கண்டித்தே வருகிறார். ஆனால், அவரும், ஆசாத் கூறுவது போலவே தான், கூறுகிறார்!

மொழி ஆதிக்கத்தைப் புகுத்தியதாலேயே பாகிஸ்தானம் மலர்ந்ததெனும் பாடத்தை அறிவிக்கும், இவர்கள், இந்தி விஷயத்தில் மட்டும்—ஏனிந்தப்பிடிவாதம்செலுத்துகின்றனர்?

மொழி வெறியை மூலவரும் சிஷ்யரும் கண்டிக்கின்றனரேயொழிய, அம்மொழிதான் அரசு மொழி என்பதில், ஆழமான கருத்துக் கொண்டுள்ளனர். ஆனால், தமது வழிக்கு அவர்கள் தரும் பெயர், நல்லெண்ணத்துடன் இதனைச் செய்ய வேண்டும், என்பதாகும்.

இந்த நல்லெண்ணம்ஏற்பட்டுவிட்டால், இந்திய உபகண்டத்திலுள்ள எல்லோரும் இந்தியை ஏற்றுக் கொள்வார்களாம்— கூறப்படுகிறது.

வெறி கொண்டோர்!—ஒருபக்கம்.

சூட்சுமபுத்தியுள்ளோர் — மற்றோர் பக்கம்.

இவ்வண்ணம், இருசாரினர், இந்திக்காகப்பாடுபடுகின்றனர். எப்படியாவது, அரசுமொழியாக்கும் ஆசையோடிருக்கின்றனர்.

ஆனால், அவர்களையும்மீறி, உண்மைகள் ஓடி வருகின்றன. அதில், ஒரு காட்சிதான், ஆசாதுக்கு ஏற்பட்ட ஆவேசம். அவரையே, அங்குள்ளோர், குற்றம் சாட்டும் கட்டம். ஆசாத், முன்னாள் காங்கிரஸ் தலைவர்! தாண்டனும், அப்படித்தான்! இருவரும் மோதிக்கொள்கின்றனர் — மொழிப் பிரச்னையில். காரசாரமாகத் தாக்கிக் கொள்ளுகின்றனர். எனினும், ஆசாத், கடைசியில் இந்த அளவுக்கு வக்காலத்து வாங்குகிறார்! எத்தனை நாளைக்கு முடியும்? இன்று. சிறு விஷயத்தில், தகராறு!நாளை...!! ❀

திரு-கொச்சியில்

தி மு. க. முழக்கம்!

புரட்சித் தொகுப்பு!!

புதுமைப் பூங்கா!!!

கேரள முரசு

(தி மு. க. தமிழ் மாதமிருமுறை)

ஆசிரியர்

கே. ஏ. கலையழகன்

1—5—54 மே முதல் வெளிவரும்.

தனி இதழ் 0—2—0

ஆண்டுச் சந்தா ரூ 3—12—0

நாடெங்கும் விற்பனை ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு:—

எஸ். ஆறுமுகம்,

நிர்வாகி,

'கேரள முரசு'

வண்டிப்பெரியார், திரு-கொச்சி.

தள்ளாடும், தறி!

[2]

இருதயராஜ் பேராசிரியர்
செயிண்ட் ஜோசப் கல்லூரி
திருச்சி

கைத்தறிக்காரர்கள் நூல் ஆலைகளிலிருந்து நூல் வாங்கவேண்டியிருக்கிறது. நெசவு ஆலைகளுக்குத் தரப்படும் நூலைவிட 20o/o அதிக விலையுள்ள நூல்தான் கைத்தறிக்குத் தரப்படுகிறது. அதனால் ஆலைகளைவிட அதிக விலைக்கு நூலைக் கொள்முதல்செய்து, ஆலைகளில் இருப்பதுபோல் சலவை செய்ய வசதிகள் இன்றி, ஆலைகளில் உபயோகிப்பதைவிட மட்டரகமான சாயத்தைத் தோய்த்து, கைத்தறிக்காரர்கள் தயாரிக்கும் துணி, விலை அதிகமானதாகவும், பொதுவாகவே வாங்குபவருக்கு மனதுக்குப் பிடிக்காததாகவும் இருக்கிறது.

அத்துடன் ஆலைகளிருந்து கிடைக்கும் நூல் "ஒரு நெசவாளிக்கு ஒரு மாதத்தில் 10-நாட்களுக்குத்தான் முழுவேலை கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. அதனால் மற்ற நாட்களில் வேலையின்றி வாடுகிறான்" என்று சென்னை கூட்டுறவு இலாகா ரெஜிஸ்ட்ரார் இந்திய கூட்டுறவுப் பத்திரிகையில் கண்டிருக்கிறார்.

மேலும் தறி என்னும் சாதனம், என்று உபயோகத்துக்கு வந்ததோ அன்று ஏற்பட்ட புராதன முறைப்படியே இன்றும் கைத்தறிக்காரர்கள் நெசவு செய்துவருகின்றனர். ஒரு நாளைக்கு 6-லிருந்து 8-கெஜம் வரைதான் நெய்வதற்கு முடிகிறது.

பாத்தோய்த்தல், பாப்பிணைத்தல் பாவோட்டம், விழுதுகட்டல், தார் சுற்றல், நாவிழைத்தல், சாயந் தோய்த்தல் முதலிய காரியங்களை யெல்லாம் சிக்கனமான முறையிலும் குறைந்த செலவிலும், குறுகிய காலத்திலும் செய்து முடிப்பதற்கு நெசவாளிகள் விஞ்ஞான முறையில் தொழிற் பயிற்சி யடையாமலிருக்கிறார்கள். ஆலைகளில் அடிக்கடி புதுப் புது மாதிரிகள், நூதனமான ரகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இதற்காக நிபுணர்கள் அமர்த்தப் பட்டிருக்கின்றனர். வாங்குபவரின் விருப்பங்கள், தேவைகள் இவைகளை அறிந்துகொண்டு அதற்குத் தக்கபடி தயாரிக்கின்றனர். கைத்தறிக்காரர்களுக்கு இந்த வசதிகள் சிறிதேனும் கிடையாது.

இதுவரை கைத்துண்டுகள், லுங்கிகள் போன்ற சிலரகக் கைத்தறித் துணிகள், சிங்கப்பூர், சிலோன், மலேயா, தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஆனால் இப்போது அங்கே யெல்லாம் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதித்திருப்பதனாலும் அமெரிக்காவும் ஜப்பானும் போட்டியிடுவதாலும் இந்தியக் கைத்தறித் துணி அங்கு அவ்வளவாக விற்பனையாவதில்லை. அதனால் கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது.

வழக்கமாக நெசவாளர்கள் சுயேச்சையாக எதுவும் செய்வதற்கில்லை அவர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே தரகர்களும் வியாபாரிகளும் இருக்கின்றனர். அநேகமாக தரகர்கள் கொடுக்கும் ஆர்டர்களை யொட்டியே நெசவாளி நெய்கிறான். தரகர்களும் பெரும் முதல் படைத்தவர்களல்லாதலால் அவர்களும் புது மாதிரியான ரகங்களைப் போடச் சொல்லுவதில்லை. விற்குமோ விற்காதோ, எங்கே விற்காமல் தங்கிவிடப்போகிறதோ என்ற பயத்தால். புதிய ரகங்கள் செய்வதற்கு தறியில் மாற்றங்கள் செய்வதற்கான முதலீடும் அதிக கூலியும் கொடுப்பதற்குத் தரகர்கள் சம்மதிப்பதில்லை. வியாபாரிகளும் புதிய தினுசுகளை நெய்யச் சொன்னால் தரகனுக்கு முன் பணம் கொடுக்கவேண்டும் என்ற காரணத்தால் புதிய ரகங்களுக்கு ஆர்டர் கொடுப்பதில்லை.

மேலும் கைத்தறித் துணி வியாபாரம்செய்யும் வியாபாரிகளும் சிறிய கைம்முதல் படைத்தவர்களே. பெரிய வியாபாரிகள் சீக்கிரம் செலவாகக் கூடியதும் கடனுக கிடைக்க வசதியுள்ளதுமான ஆலைத்துணி வியாபாரத்தையே பெரிதும் விரும்புகின்றனர்.

கைத்தறி நெசவுத் தொழிலில் ஆர்டர் கொடுக்கவும் நூல் கொடுத்துதவவும் தரகர்கள் இல்லாவிடில் தொழிலாளிகள் அதிகம் கஷ்டப் படுவார்கள் என்றாலும், தரகர்களுடைய தலையிட்டால் தொழிலாளருக்கு அதிக துயரமே ஏற்படுகிறது.

தறிகாரர்களிடம் சரக்குகளை விலைக்குப் பெற்று சிறு கமிஷனுக்காக அவைகளை அவ்விலைக்கே வியாபாரிக்குக் கொடுப்பவர் ஒரு சாரார். இவர்கள் வியாபாரியின் நன்மதிப்பைப் பெற எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துச் சரக்குகளை வாங்கமுடியுமோ அவ்வளவு குறைத்து வாங்குகின்றனர். விலையைக் குறைக்கும் நோக்கத்துடன் சரக்குகளின்மேல் இல்லாத பொல்லாத காரணங்களையும் குறைகளையும்காட்டி நெசவாளியின் விற்பனை வலுவை ஒடிக்கின்றனர். குறைந்த விலையைக் கொடுப்பதுமன்றி தன் இலாபத்துக்காக உருப்படியின் மேலோ ரூபாய் இவ்வளவு என்றோ வட்டம் வேறு வாங்குகின்றனர். சில சமயம் தறிக்காரனுக்கு சிறு தொகைகளைக் கடனுகக் கொடுத்துவிட்டு அவனை தங்களுக்கே தாங்கள் சொன்னவிலைக்கு சரக்குகளைத் தரும்படி நிர்ப்பந்திக்கிறார்கள், தரகர்கள். இன்னும் சில சமயங்களில் இத்தரகர்கள் சரக்குகளுக்குக் கைமேல் பணம் கொடுக்காமல், பணத்திற்குப் பதில் நூல் கொடுக்கின்றனர். அந்நூலுக்குக் கடைவிலையிலும் அதிக விலை வைத்துக் கொடுப்பார்கள்.

தறிகாரர்களுக்கு நூலும் பணமும் முன்னால் கொடுத்துச் சரக்குகளைப் பெற்றுச் சிறிது கூடிய விலைக்கு வியாபாரிகளுக்கு அச்சரக்குகளைக் கொடுப்பவர்மற்றொருவகைத் தரகர். இவர்கள் தறிகாரர்களுக்கு கடை விலையிலும் உயர்ந்த விலை நூலும் குறைந்த நெசவுக் கூலியும் கொடுத்துக் குறைந்த விலையில் சரக்குகளை உற்பத்தி செய்து வியா

(13-ம் பக்கம் பார்க்க)

ஆச்சாரியாருக்கு

திராவிட மக்கள்

தயாராக வைத்திருந்த

பிரிவுபசாரம்

பாராண்ட மகிபா!
பஜகோவிந்தம் பாடியே!
துயர்மழை பொழிந்தவா!
துப்பாக்கி நாதா!

துந்துபி முழக்கினாய்—

துயரத்துடன் செல்கிறாய்.

வெந்த மனதில் வேல் பாய்ச்சியவா!
அறுந்த தாலிகளை எண்ணி மகிழ்ந்தவா!
சாதி வளர்க்கும் தயாளனே!
வேதியர் குல விளக்கே!

'எறும்பு' என்று ஏசினாய்;

'சுருண்டேன்', எனச் செல்கிறாய்.

இரண்டாண்டு காலம்—
என்னென்ன வீசினாய்!
கல்வித் திட்டம்! பல்வகைப் பேச்சு!
அடிதடி—கொலை—அனைத்தும் தந்தாய்.

வாலிப மலர்களை வாட்டிய பெரியோய்!

வரம்பிலா குறும்பினை வழங்கிய நல்லோய்!

ஆண்டவன் மேலே—ஆள்பவன் இங்கே!
நானே தூதன்—நம்புவீர்—தொழுவீர்
என்று பேசி இறுமாப்புடனே—
சிரித்த சிலந்தியே! நகைத்த நரியே!

சாத்திரம் பேசினாய்! சர்வாதிகாரம் விரும்பினாய்!

தாங்கொணாக் கஷ்டம், தந்தாய்—வளர்த்தாய்!

மமதை மலையே! மக்கள் தேளே!
இரத்தம் குடித்தாய்; பித்தம் வளர்த்தாய்.
'கணக்கை முடிப்பேன்' எனக் கர்ச்சித்தாய்!
முடிந்தது கணக்கு—எமக்கல்ல; உமக்கு!!

ஆணவக் கட்டே! சாணக்கிய முனையே!

தொல்லைப் புலியே! சுதந்திர விரோதியே!

செல்கிறாய்; மகிழ்கிறோம்.
சிந்தை களிக்கிறோம்.
எந்தையர் நாட்டின் இழிநிலை வளர்த்து
குழம்பிய குட்டையில் கோட்டம் அடிக்க,

வந்த புயலே! வைதிகம் பேசியே!

ஆச்சாரியாரே! அதிசய மனிதரே!

செல்கிறீர்; மகிழ்கிறோம்—

சிந்தை களிக்கிறோம்.

அறவுரை போதாது

புவிச் சக்கரவர்த்தி ஒருவனுக்கு புதல்வன் ஒருவனிருந்தானாம்! அவன் முகத்தில், புன்சிரிப்பென்பதே இருக்காதாம். செல்லப் பிள்ளையாதலால், எது கேட்டாலும் இல்லையென்னாது, மன்னன் குவித்தான்—குதூகலம் உண்டாவதற்கான வழிவகைகளைச் செய்தான். ஆனால், குழந்தையின் முகம், கோபக் குறியால் நிறைந்திருந்ததே தவிர, ஆனந்த மலர்ச்சியின் அறிகுறியே இல்லை. இதைக் கண்ட அரசன், முரசறைவிக்க — ஓர் முதுகிழவர் வந்தாராம்—செல்வனின் முகத்தில் தாம் சிரிப்பை வரவழைப்பதாகக் கூறி, ராஜமகனை அழைத்து, "இளவரசே! இந்தாரும், ஒரு தாள். இதனை எடுத்துக்கொண்டு, பக்கத்திலிருக்கும் இருட்டறைக்குள் செல்லுங்கள். மெழுகுவர்த்தி ஒன்றைக் கொளுத்தி, இந்தத் தாளைக் காட்டுங்கள்" என்று கூறிச் சென்றாராம். அரசகுமான் அங்ஙனம் செய்யும்போது, அந்தத் தாளில் சில எழுத்துக்கள் தோன்றினவாம். அதைப் படித்தபின், அதன்படி நடந்து தினமும் சந்தோஷ முகமும், குளிர் சிரிப்பும், கூத்தாடும் நிலையும் பெற்றானாம், கொற்றவன் குமரன். அவன் மனோநிலையை மாற்றக்கூடிய முறையில், முதுகிழவர் தந்த தாளில், எழுதப்பட்டிருந்த வாசகம் "தினமும் ஒருவருக்கு உதவிசெய்! ஜெகத்தின்பம் பெறலாம்!!" என்பதாம்.

⁕

அரசிளங்குமரன்! ஆகவே, அவனால், பிறருக்கு உதவி செய்ய முடியும். ஜெகத்தின்பத்தையும் பெற முடியும்.

அதே அறநெறி, ஒரு அன்றாடங் காய்ச்சியிடம் கிடைத்திருந்தால், அவன் பிறருக்கு என்ன உதவி செய்யமுடியும்? தன்னிடமிருக்கும் தாம்கொணு பசியில் வேண்டுமானால், பங்கு தரக்கூடும்!

இந்த உண்மை நிலையை உணராது, கதையைக் கூறி—அதில்வரும் அரசிளங்குமரன் ஜகத்தின்பம் பெற்ற அற்புதத்தை விளக்கி—அதன்படியே நீங்களும் நடக்க வேண்டுமென்று, எல்லோரையும் கேட்டுக்கொள்ளும் நபரைப்பற்றி என்ன எண்ணுவீர்கள்.

அந்த நபர், வேறு யாருமல்ல! பண்டித நேருதான்!!

அண்மையில், டில்லியில், நிர்வாக அதிகாரிகளைப் பயிற்றுவிக்கும் கழகம் ஒன்றைத் தோற்றுவித்துப் பேசும்போது கூறினாராம்: "நிர்வாக அதிகாரிகளாக வருவோருக்கும் மக்களுக்குமிடையில் அதிகத் தொடர்பிருக்க வேண்டும். அப்போதுதான், உண்மையான இன்பத்தைக் காணமுடியும் என்னைப் பாருங்கள்! அடிக்கடி, இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்று, பல தரப்பட்ட ஜனங்களையும், இலட்சக் கணக்கில் சந்திக்கிறேன். அது போல, நீங்களும் ஜனங்களிடம் சென்று பழகவேண்டும். அப்போதுதான், நிர்வாகத்துக்கும் சரி தனிப்பட்ட முறையிலும் சரி, பலனும் பயனும் பெறலாம்' என்று தெரிவித்திருக்கிறார்.

பண்டிதரின் அறவுரை, பாராட்டக்கூடியதே! ஆனால் அவரைப் போல ஒவ்வொரு அதிகாரிகளும் நடக்க ஆரம்பித்தால், என்ன ஆகும்? ரெவினியு இன்ஸ்பெக்டர்கள், பண்டிதர் கூற்றுப்படி, ஜனங்களைச் சந்தித்துப் பேசப் புறப்பட்டால், விளைவு எப்படியிருக்கும்! சாதாரண ஹெல்த்-இன்ஸ்பெக்டரைக் கண்டாலே நடுங்கியோடுவர், நமது மக்கள். அவர்களை நோக்கி, அதிகாரிகளும் படையெடுத்தால்....? இரண்டும் கெடும்!

பண்டிதர், அரசிளங் குமாரனைப் போன்றவர்—எதையும், செய்யலாம். அதிகாரிகள் — அப்படிப்பட்டவர்களல்ல—நிர்வாக இயந்திரத்தை நடத்திச் செல்லவேண்டியவர்கள்.

அதுவும், இப்போதிருக்கும் அமைப்பில், அன்னக்காவடிகள் அதிகமேயொழிய, அரசிளங்குமரர்களல்ல!

அந்த அன்னக்காவடிகளின் நிலையிலிருப்போர்தான், அதிகாரிகள். அவர்களையும், அவர்கள் சந்திக்கச் செல்லும் மக்களையும், 'அன்னக்காவடிகள்' என்ற நிலைமையினின்று மீட்டு. பிறகு இப்போதனை புரிந்தால், நலமாயிருக்கும்.

அதைவிட்டு, நிர்வாக அதிகாரிகளை ஜனங்களிடம் போகச் சொன்னால், மக்கள் மன்றத்திலிருந்து அதிகாரிகளுக்கு என்ன கிடைக்கும்? பண்டிதர் போனால் மாலை, கிடைக்கும்! அதிகாரிகளுக்கு ஏச்சும் பேச்சும் கிடைக்கும்!!

எனவே, அடிப்படைக் கோளாறை அறியாமல், அறநெறி உரைப்பதும், புத்திமதிகள் கூறுவதும், ஆபத்தாகும். ஆனால், அதனை எண்ணிப் பாராமலேயே ஏதேதோ உரைக்கின்றனர். இவ்வண்ணம் அதிகாரிகள் தொடர்புகொண்டு பழகினால், நாட்டில் ஒருவரையொருவர் அறியும் வாய்ப்பும் ஏற்படுமாம். உண்மைதான்! ஆனால், அறிந்து கொண்டால், போதுமா?

காத்தானைக் காண்கிறார், கலெக்டர்! அவன் கஷ்டங்களையும் அறிகிறார்! பண்டிதர் கூற்றுப்படி, பொதுஜனத் தொடர்பைப் பெற்ற அக்கலெக்டர் என்ன செய்ய முடியும்? காத்தானின் கழனியை மிராசுதாரிடமிருந்து பெற்றுத்தர முடியுமா! இன்றுள்ள சட்டம் சம்மதிக்குமா!! பெற்றுத்தர நினைத்து 'காத்தான்! நிலம் உனதே; போய், உழு' என்று கலெக்டர் கூறிவிட்டால், மிராசுதார் என்ன செய்வார்! ஓடோடியும் வந்து 'என் உரிமைபோகிறது

மகிழ்ச்சி

விருதுநகர் தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களின் துணைவியார் தோழியர் டாமேன்வரிக்கு மார்ச் 28-ந்தேதி ஆண் குழந்தை பிறந்து, தாயும் சேயும் நலம். குழந்தைக்கு சௌந்தரபாண்டியன் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

போலீசை அனுப்புங்கள்' என்பார். கலெக்டர், பண்டிதர் கூற்றுப்படி, அவருக்கும் உதவி செய்து, தன்னால் வயலிலிறங்கிய காத்தானை, தன்னுடையபோலீசைக்கொண்டே சுடச் சொல்லவேண்டும்! இதைத் தவிர, வேறென்ன காணமுடியும்?

காத்தானைப் போன்றோர்தானே, நாட்டில் அதிகம்! பொது மக்களுடன் பழகவேண்டுமென்றால், காத்தான் பரம்பரையிடம் பழகுவதா—அல்லது, உல்லாசக் கிளப்பும், ஓடியாடத் தோட்டமும் உள்ள, "கிளப் வாலா" போன்ற 'சமூகத்தின் தூண்கள்' என்று பண்டிதரும் பிறரும் கருதி M L. C ஆக்குகின்றனரே, அவர்களுடன் பழகுவதா. யாருடன்? பண்டிதரல்ல—யாரானாலும், தெளிவாகப் பதில்கூற முடியாது! ஏனெனில், 'பொதுஜனம்' என்பதற்கு இன்றுள்ள, ஆட்சி முறையிலிருக்கும், அர்த்தம் வேறு; உண்மையிலிருக்கும் பொருள் வேறு.

எனவே, அதிகாரிகள் மட்டுமல்ல எல்லோரும், மக்களுடன் தொடர்பு கொண்டு பழகி அன்பையும் நேசத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றால், இதுபோன்ற அறவுரைகள் போதாது! அடிப்படை மாறவேண்டும்!!

இதை எங்கே நினைக்கிறார் நேரு? போதிப்பது, அவருக்கு பொழுதுபோக்கு! அதனால், ஏதோ கூறுகிறார்—போகிறார்.

★

அந்தமான் நோக்கி!

அந்தமான்!—தீவாந்திர சிட்சை பெற்றோரின் தீவு, ஒருபோது. இன்றோ, அதனைச்சிங்காரத்தீவாக்க திட்டம் போட்டிருக்கின்றனர், இந்திய சர்க்கார்.

முன்பெல்லாம் அப்பெயரைக் கேட்டாலே மக்கள், மருள்வர். இப்போது அங்கு போய்க் குடியேற விரும்பி ஏராளமான விண்ணப்பங்கள் குவிகின்றனவாம்.

அதுபற்றி இந்திய அரசியலாரின் உள்நாட்டு மந்திரி, தெரிவித்துள்ள சில விபரங்கள்:

அந்தமானில் எத்தனைபேரை குடியேற்றவேண்டும் என்பதுபற்றி ஒருவிதமான கோட்டாவும் ஏற்படுத்தவில்லை. முக்கியமாக இடம் பெயர்ந்தவர்களுக்குத்தான் சலுகை வழங்கப்படும். 2000-பேரைக் கொண்ட 400-குடும்பங்கள் வரும் மழைக்காலத்திற்கு முன்பு அந்தமான் மத்திய பாகத்தில் குடியேற்றப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களில் 300 குடும்பங்கள் கிழக்கு வங்கத்திலிருந்து இடம்பெயர்ந்த விவசாயிகளிடமிருந்து பொறுக்கி எடுக்கப்படவேண்டும். அந்தமான் தீவில் 300-சதுரமைல் பரப்புள்ள காட்டைத் திருத்தி விவசாய நிலங்களாக்கமுடியும் 150,000-பேரைக் கொண்டு 30,000-குடும்பங்களை அந்தமானில் குடியேற்றலாம். ஆனால் இந்தக் குடியேற்றம் 30-வருஷங்களில் நடைபெறவேண்டும்.

அந்தமான் 5-வருஷ குடியேற்று அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பொறுக்கி எடுக்கப்படும் ஒவ்வொரு விவசாய குடும்பத்திற்கும் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றது:-

நெல் பயிர் விவசாயத்திற்காக காடுகள் திருத்தப்பட 5-ஏக்கர் நிலம் தரப்படும்.

வீடு கட்டுவதற்கும், பேச்சலுக்கும் பழ மரங்கள் வளர்ப்பதற்கும் மேலும் 5 ஏக்கர் திருந்தப்படாத நிலம் தரப்படும்.

திருப்ப வசூலிக்கப்படும் முறையில் ரூ. 2000 ஒவ்வொரு குடும்பத்திற்கும் கடன் தரப்படும் அதாவது இந்தியாவிலிருந்து அந்தமான் செல்வதற்கு ஏற்படும் செலவு, வீடுகட்டுவதற்கு ஏற்படும் செலவு, மாடுகள் வாங்குவது முதலியவற்றிற்காக மேற்கூறிய ரூ. 2000 பயன்படுத்தப்படும். மற்றும் உரம், விதை முதலியன வாங்கவும் முதல் மகசூல் கிடைக்கும்வரை உள்ள ஜீவனச் செலவு ஆகியவற்றிற்கும் அந்தத் தொகை பயன்படுத்தப்படும்

ஆரம்பத்தில் நிலவரி கிடையாது.

★

பொம்மையின் புலி வேஷம்!

"அந்நிய ஆதிக்கமே,
திரும்பிப்போ!"

"அடிமை வாழ்வை
அறுப்போம்!"

இந்தக் குரலை, அடக்கி ஒடுக்கிட முனையும் ஆதிக்கக்காரர்கள், எப்போதுமே வெற்றிபெற்றதில்லை. ஆனால், புதுவைக் கவர்னர் மேனார்டு என்பார், கனவு காண்கிறார்! கனலென எழும்பி, கர்ஜிக்கிறது, பிரெஞ்சிந்தியா. மக்கள் எல்லாம், ஒன்று திரண்டுவிட்டார்கள். கட்சிபேதமின்றி, கிராமத்துக்குக் கிராமம் விடுதலைக்குரல் அதிகமாகி வருகிறது. இதனைக்கண்ட, பிரான்சின் பொம்மை மேனார்டு, துடிக்கிறாராம்! துடுக்கடக்கவேண்டும், எனப் பதைக்கிறாராம்!! அதன் விளைவாக, பிரெஞ்சிந்திய அமைச்சர்களாயிருந்த குபேர், முத்துக்குமரனார், மேயர் முத்து ஆகியோரைப் பதவியிலிருந்து, 'டிஸ்மிஸ்' செய்துவிட்டதாக உத்திரவிட்டிருக்கிறாராம் அம்மூவரும் விடுதலைவீரர்களாகப் பவனிவந்து கொண்டிருக்கிறார்கள்—பிரெஞ்சு ஆதிக்கத்தை அகற்றுவோம் எனப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள் — இந்தப் பிரெஞ்சுப் பொம்மை, அவர்களை நீக்கிவிட்டதாக உத்தரவு பிறப்பித்திருக்கிறது. விந்தைதான்! சின்னஞ் சிறு இடம் — அங்கே, ஓர் பொம்மை—அதுவும் ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் ஒரு சர்க்காரின் சார்பில். அந்தப் பொம்மை புலியாகிறது! ஆச்சரியம் தான். அதைவிடப் பெரிய ஆச்சரியம், உலக நாடுகளின் விடுதலைக்காக உரத்து முழக்கமிடும் நேரு பண்டிதர், இன்னும் திட்டவட்டமான நடவடிக்கையைத் தெரிவிக்காமலிருப்பது!! அறப்போர் துவக்கப்பட்டு, நாட்கள் கொஞ்சமே ஆயிற்றென்றாலும், பல 'கொம்யூன்'கள், பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்து போர்க்கொடி உயர்த்திவிட்டதாகவும், விடுதலை வீரர்களின் பலம் அதிகரித்து வருவதாகவும் அறிகிறோம். மகிழ்கிறோம்.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்கு முறை!!

திராவிடநாடு

காஞ்சி] 4—4—54 [ஞாயிறு

கொடுமை கூடாது

★

"சாதாரணச் சம்பவமா, அது!—மனித வர்க்கத்தையே மண்மேடாக்கக்கூடிய செயலன்றோ?—இதனைக் கண்டிக்க வாரீர். ஒன்று கூடி எதிர்க்கவேண்டும்—வாரீர்" என்று பண்டிதர், அகில உலகுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வெளியாகுமுன்னரே, ஆஸ்திரேலியாவில் எழும்பியுள்ள கலக்கமும், இலண்டனிலேற்பட்டுள்ள பீதியும், ஜப்பான் கண் கலங்கி நிற்கும் சம்பவமும், தீப்போல் பரவிக் கிடக்கின்றன.

"என்ன நேருமோ! என்ன வருமோ!!" என்று உலகத்தின் மூலைகளிலெல்லாம், மக்கள் குழம்பிக் கிடக்கிறார்கள்,

ஒரு சில மணி நேர சம்பவம் அது! ஆனால், அது தந்துள்ள பயங்கரமான பாடங்கள்—பலவிதம். கட்டுமரமேறி, மீன் பிடிக்கச் சென்றவர், சுருண்டு வீழ்ந்து—உடம்பெல்லாம் அக்கினிமயமாக எரிய—அழகிழந்த, உருக்குலைந்து திரும்பியிருக்கிறார்கள்! அவர்கள் பிடித்துவந்த மீனைத் தின்றோர், வாதைக்காளாகி வதைகின்றனர். அவர்களுடையும் வேதனைகளை விவரிக்க இயலாதாம்—விதவிதமான டாக்டர் அறிக்கைகள் வெளிவந்தபடியுள்ளன. அந்த விபரங்களைக் காணும் விஞ்ஞானிகள் எல்லாம், திகைக்கின்றனர்! கலங்குகின்றனர்!! உலகையே பரபரப்பில் ஆழ்த்தக் கூடிய சம்பவமாகிவிட்டது, அது.

கடந்த மார்ச் முதல் தேதி, பிகினி எனுமிடத்தில், பசிபிக் சமுத்திரத்தில், தமது விஷப் பரிட்சையை செய்து பார்த்தனராம், அமெரிக்கர். அணுக்குண்டுக்கு அப்பன் என்று சொல்லக்கூடிய ஐட்ரஜன் குண்டை வெடித்துப் பார்த்தனராம். அதன் விளைவுகளைப்பற்றிக் கேட்கும்போதுதான், உலகில், இவ்வளவு பரபரப்பேற்பட்டிருக்கிறது. சமுத்திரத்துக்கு மத்தியில் வெடிக்கச் செய்த அந்தக் குண்டின் சக்தி, பல நூறு மைல்களைப் பாதித்திருக்கிறதாம்! அந்தக் குண்டின் தூணுக்குகள், காற்றில் கலந்து, பல இடங்களுக்குப் பரவுகிறதாம். அக்காற்றைச் சுவாசித்தாலே போதுமாம்! நெருப்பைத் தின்றால் எப்படியிருக்குமோ அதன் விளைவுகளைக் காணலாமாம். அக்காற்றைஉட்கொண்டால், உள்ளமெல்லாம் எரிகிறதாம்—திடீரென ஓரிடம் புண்ணாகிறதாம் — மற்றோரிடத்தில் உப்புகிறதாம். அந்தக் காற்றைச் சுவாசித்தபடி கடலில் வாழும், மீன்களைத் தின்றாலும் போதுமாம்! ஆள் உயிருக்கே அபாயமாம்!! அந்தக்குண்டிலடங்கியிருக்கும் மின்சார சக்தி, காற்றலைகளைப் போலப் பரவக்கூடியதாம். பல வருஷங்களுக்கு, அப்படியே இருக்குமாம். அந்தச் சக்தி பரவிய இடங்களில் ஜீவராசிகளே வாழமுடியாதாம். பாலைவனம்தானாம். இதனாலேயே, எல்லோரும் கலங்குகின்றனர்! மாபெரும் கேடு!—என்று மன அதிர்ச்சி அடைந்திருக்கின்றனர். "எப்படியாவது இக்கேடுகளை அடக்கவேண்டும்" என்கிற ஆசையைத் தெரிவித்திருக்கின்றனர். ஆனால், அமெரிக்கர், தமது குண்டின் பலத்தைக் கண்டு உலகம் வியக்கிறதெனும் ஆனந்தத்தில் உலவுகின்றனராம்! அடுத்தபடி இன்னோர் குண்டினையும் பரீட்சித்துப் பார்க்கப்போவதாக அறிவித்துள்ளனர்!! பார் கலங்குகிறது — 'பாபி'கள் பரவச முரசு தட்டுகின்றனர். இந்தப் பயங்கரத்தைக் கண்டே, பண்டிதர், உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மனித வர்க்கத்தையே ஒழிக்கக் கூடிய இக்கொடுமையைக் கண்டிக்க முன்வரும் எவரையும், உலகம் பாராட்டும்.

ஆறறிவு படைத்தவன் மனிதன்—என்பர்! அவன் செய்திருக்கும் ஆகாயக் கப்பலையும், டெலிபோன் கருவியையும், சிந்தனை விளைவுகளையும் குறித்து, முன்னேறும் உலகம், பாராட்டுகிறது. ஆனால், அந்த அறிவு, இதுபோன்ற நாசகாரியத்துக்கா, பயன்படவேண்டும். அமெரிக்க ஆலையின் உயரம்—நகரின் சிறப்பு — சேட்போரின் மனதைக் களிப்பூட்டும். அங்கே, இந்த 'ஆட்கொல்லி'த் திட்டமும் வகுக்கப்படுவதைக்கண்டு, மனமகிழ்ச்சியா, அடைய முடியும்? மல்லிகைத் தோட்டத்தை அழித்து கள்ளிபடர வழி வகுப்பவனைக் கசடனும், ஏற்கான்! ஆனால், இந்த ஐட்ரஜன் குண்டு — மனித வர்க்கத்தையே அழிக்கச்செய்யும் ஆற்றலையன்றோ, பெற்றிருக்கிறது.

கேடுபயக்கும் கொடுமைக் குண்டைத் தயாரித்து வெடித்துக் காட்டிய அமெரிக்கா, பரவசப் பண் பாடுகிறது. உலகத்து விஞ்ஞானிகள் யாவரும்அஞ்சி, வேண்டுகோள் விடுகின்றனர்! ஆனால் அமெரிக்கரோ, ஆனந்தத்தோடு குண்டின் 'கியாதி'யை வெளியிடுகின்றனர்!!

மேற்படி குண்டைத் தயாரிக்க ஏராளமான பொருள் செலவிடப்பட்டதாம்.

எதற்குத் தெரியுமா, இக்குண்டு?—ரஷ்யாவை மிரட்ட! பொதுவுடைமை பூத்துக் குலுங்கும் அப்பூமியை மிரட்டிடும் ஆவலில், புதுக் குண்டுகளைத் தயாரிக்கிறது, அமெரிக்கா.

ஆனால், உலகின் நிரந்தரக்கேடாக இருந்துவரும் வறுமைக் கொடுமையை ஒழிக்க வழி ஒன்றும் காணவில்லை குண்டு வெடித்த, கொஞ்ச நாட்களுக்கெல்லாம், அமெரிக்கத் தலைவர் ஐஸன்ஹோவர், பிரெஞ்சு சர்க்காருக்குப் பின் கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார்,

இந்தோ சீனப்போரில், கம்யூனிஸ்டுகள் பலம் அடையாதிருக்க, முயலுக. வேண்டிய உதவி, செய்கிறோம்,'' என்று. எங்கெங்கு, துப்பாக்கியும்—குண்டும் — பீரங்கியும் வேண்டுமோ, அவைகளையெல்லாம், அனுப்பத்தயார் என்கிறார், ஐசன்ஹோவர்! கொடுமைக் குண்டினை பரீட்சித்துப் பார்க்கிறார்!!

இந்தளவுக்குப் பொதுவுடைமைக் கொள்கை கண்டு கிலி கொள்பவர், அக்கொள்கை கூறும் சமதர்மமனத்தைத் தனது நாட்டில், நிலையிறுத்தியிருக்கிறாரா? ஏழையில்லை! வறுமையில்லை!!—என்று, கூற முடியுமா, அவரால். இது இரண்டும் ஒரு நாட்டில் இல்லையென்றால், அங்கே பொதுவுடைமைக் கொள்கைக்கு வேலையில்லை. ஆனால், அமெரிக்காவின்நிலை என்ன? இதோ! 24ந் தேதி கிடைத்த செய்தி:—

வாஷிங்டன்,—இன்று ஜனாதிபதி பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, வேலையில்லாத்திண்டாட்டம் வளர்ந்து வருவதைத் தடுக்க என்ன நடவடிக்கையெடுத்திருக்கிறீர்கள்? — என்று, நிருபர்கள் கேட்டனர். அதற்குப் பதிலளித்த ஐஸன்ஹோவர், இது பற்றி சர்க்காரிலுள்ளோர் ஒவ்வொரு நாளும் யோசனை செய்துகொண்டிருப்பதாகவும், ஆனால் அவசர நடவடிக்கை எதுவும் அவசியமில்லையென்பதாகவும், வெளியிட்டார்.

வேலையில்லாத் திண்டாட்டம்— எங்கே? ஐட்ரஜன் குண்டுபோடும் நாட்டிலே!

வேலையில்லாக் கொடுமையை ஒழிக்க அவசர நடவடிக்கை தேவையில்லையாம்! யார், சொல்வது? ஐட்ரஜன் குண்டின் அதிபதி!!

மக்களின் வாழ்க்கையை விட, நாடு பிடிக்கும் ஆசை. அதிகமாகிக் கிடக்கிறது, அமெரிக்கருக்கு. அதனாலேயே, தமது மக்கள் பிரச்னைகளை விட, பிற நாடுகளை வலையில் வீழ்த்தும் பிரச்னைகள் பெரிதெனத் தென்படுகின்றன — ஆயுதங்களும், குண்டுகளும் அதிகமாகக் குவிக்கப்படுகின்றன.

இந்த அக்கிரமத்தைக் கண்டித்து, உலகக் குரலோடு தன்னுடைய குரலையும் சேர்த்திருக்கிறார், நேரு பண்டிதர். இந்தநற்பண்புகண்டுபாராட்டுகிறோம்—அதே நேரத்தில், அமெரிக்காவைப் போல, வீம்புக்கான வழிகளில் பணத்தை விரயமாக்கும் பண்புவளர்வதைத்தடுத்து, இந்திய உபகண்டத்தின் வேலையில்லாக் கொடுமையைப் போக்கும் ஆக்க முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்றும், கேட்டுக்கொள்கிறோம்.

ஏனெனில், நேருபண்டிதர், சில நேரங்களில், மக்களுக்குள்ள ஆபத்துக்களை உணர்ந்து, அவை தடுக்கப்படவேண்டும் என்று சங்கநாதம் செய்கிறார்! அடுத்த விநாடியே, "அமெரிக்கா," காட்சியளிக்கிறது நடைமுறையில்! அந்த மனப்பான்மையை ஒழித்து, "மக்கள் வாழ்வே முக்கியம்—பிறகே, கவுரவம்," எனும் கொள்கைக் கொடியை ஏந்த வேண்டும்.

இந்த நல்லெண்ணம் இல்லாததாலேயே, நாசக்குண்டுகளில், பணத்தைக் கொட்டுகிறது, அமெரிக்கா! அதனைக் கண்டிக்கும் பண்டிதர், அந்தளவோடு நின்றிடாமல், ஆயுதப்பெருக்கவழிகளில் செலவாகும் பணத்தை, ஆதரவற்றோரின் துயர் துடைக்கும் திட்டங்களைத் தீட்டப் பயன் படுத்தவேண்டும். அதுவே நற்பாதை! நற்பண்பு வளர்வதற்கு, எடுத்துக் காட்டு!!

"திரும்பிவாரும் ஐயா!"

"திரும்பி வாரும், ஐயா!" என்று அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

"மெகார்தியே, திரும்பி வாரும்!" என்று அமெரிக்க மக்கள், மனுச்செய்துகொண்டுள்ளார்கள்.

அமெரிக்க செனேடர், அவர். அவரை, திரும்பிவருமாறு ஒரு லட்சம் மக்கள் கையெழுத்திட்டு கோரியிருக்கிறார்கள்.

அமெரிக்க சட்ட மன்றத்தில், தங்களின் பிரதிநிதியான அவர் நடந்துகொள்ளும் விதம் பிடிக்கவில்லையாம்! அதனால், 'திரும்பி வாரும், ஐயா!' என்றழைக்கிறார்கள், மக்கள்.

"எப்பொழுது பார்த்தாலும் உமதிஷ்டப்படி ஏதேதோ பேசுகிறீர்! இதற்குத்தானா, உம்மைத் தேர்ந்தெடுத்தோம், நாங்கள்—நீர், எங்கள் பிரதிநிதியாகயிருப்பது, எமக்கே வெட்கமாயிருக்கிறது. ஆகவே, உம்மை திரும்ப அழைக்கிறோம்" என்று ஒரு லக்ஷம் பேர் கையெழுத்திட்டு, மகஜர் அனுப்பியிருக்கிறார்கள்.

அமெரிக்கச் சட்டப்படி. இவ்வண்ணம். செய்யலாமாம்! சுமார் 4-லட்சம் மக்கள், ஏகோபித்து, இந்த மகஜரை அனுப்பினால், அந்த மெம்பரின் பதவி, காலியாகுமாம்!! அவர், திரும்பி வீட்டுக்குச் செல்ல நேருமாம். அதனால் மெகார்தியைத் தேர்ந்தெடுத்த மக்கள், இப்போது மகஜர் அனுப்புகிறார்கள். "திரும்பி, வாரும்,ஐயா!" என்று கூவுகிறார்கள்.

இது, அங்கே, அமெரிக்காவில்! இதுபோன்ற முறை இங்கேயும் இருந்தால், எத்தனை பார்லிமெண்டு உறுப்பினர்கள், திரும்பி வருவார்கள், வீட்டுக்கு!! மக்களால் அனுப்பப்பட்ட மெகார்தியாவது, ஏதேதோ பேசுகிறார். இங்குள்ள பலர், வாயையே திறப்பதில்லையே! அலவன்சை வாங்குவதும் அருமையான வகுப்பில் பிரயாணம் செய்வதும், அமர்ந்திருப்பதும், திரும்புவதுமாகவன்றோ, இருக்கின்றனர். அமெரிக்காவைப்போல இங்கேயும் ஓர் சட்டமிருந்தால், இத்தனை நாளில், பார்லிமெண்டே காலியாயிருக்குமே! டில்லி மன்றத்திலிருந்துவரும் செய்திகள் விசித்திர விசித்திரமாகவன்றோ உள்ளன. அண்மையில் ஒரு நாள், சபை நடைபெறுவதே, சந்தேகமாயிற்றும்! ஒவ்வொரு உறுப்பினரும் தத்தமக்குப் பிடித்தமான பல விஷயங்களைப்பற்றி, இஷ்டப்படி பேசிக்கொண்டிருந்தனராம். ஒருமெம்பர், இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் அலைந்தபடி, சட்டசபையில் நடமாடிக்கொண்டிருந்தாராம். சபைத்தலைவர், பன்முறை மணியடித்தும் பலன் ஏற்படவில்லையாம்—பிறகு, கண்டித்துப் பேசினாராம்—காட்டுக் கூச்சல் அடங்கிற்றும். இந்த அவலட்சண அலங்கோலம், இங்கே! அமெரிக்கச் சட்டம் இங்கிருந்தால்......!!

★ விடை பெற்றுக்கொள்ளவில்லை! ★

வெளியே, வெண்ணிலவு! கட்டிலிலே, பெண்ணிலவு!!—இரண்டையும் துறந்து, கானகம் நோக்கிச் சென்றார், புது ஒளி கண்ட புத்தர்.

'அவரது இடம் எனக்கும் உண்டு' என்று கூறிடும் ஆச்சாரியாரும், அதிகாரப் பவனி எனும் சுகபோகத்தையும், அரசுப் பொறுப்பென்னும் காதலியையும் விட்டுவிட்டு, விடைபெற்றுக்கொண்டாராம்.

கனி குலுங்கும் வாழ்க்கையில் திளைத்த அரசிளங்குமரன் சித்தார்த்தன், மக்கள் படும் அல்லலைக் கண்டு, கானகம் நோக்கிச் சென்றார்.

சிங்காரமான, சென்னைக் கோட்டையில் வீற்றிருந்த ஆச்சாரியார், விடை பெற்றுக்கொண்டதும், காரில் ஏறி, தியாகர் நகரிலுள்ள தன்னில்லம் சென்றாராம்!

*

விடை பெற்ற இக்காட்சியை, வேதனையுடன் எடுத்துரைக்கின்றன, ஏடுகள்.

சென்னைக் கோட்டை, பல அரசியல் தலைவர்களைச் சந்தித்திருக்கிறது. அரசியல் சுதந்திரம் பெறுவதற்கு முன்பும் பலர் வீற்றிருந்திருக்கின்றனர். பின்னரும், பிரகாசம்—ஓமந்தூரார்—குமாரசாமியார்—இருந்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் விலகியபோது எழும்பாத வேதனை, இப்போது உண்டாகியிருக்கிறது. ஊரார் வீட்டு உறியிலிருக்கும் பானையை உடைத்துப் பாலைப் பகிர்ந்தளிக்கும் வீட்டுப் பூனையின்மீது, தெருப் பூனைகளுக்கு, அன்பும் பாசமும் இருப்பது சகஜம். அதைவிட அதிகமாக ஆச்சாரியார்மாட்டு, பாசமும் பரிவும் இருக்கிறது, பத்திரிகையாளர்களுக்கு! அவர் விலகியதைக் குறித்து, விம்மும் குரல் கிளப்பாத ஏடுகள் இல்லை, வான உச்சியின் மீதுலவும் கதிரோனைக் கடல் விழுங்கியதுபோலவும், அதைக் கண்டமாந்தர் கலங்கித் தவிப்பதுபோலவும், தீட்டிக் காட்டுகின்றன. 'இனி என்ன ஆகுமோ?' என்று சில ஏடுகள், ஆருடம் கணிக்கின்றன. ஏனெனில், இப்போது கட்சித் தலைவராக வந்திருக்கும் காமராஜர்—'அவாளை'ச் சேர்ந்தவரல்லவே! இருவரும் காங்கிரஸ்காரர்கள்தானே எனலாம். ஏடுகளும், காங்கிரசைக் காப்பாற்றத்தான், அனுதினமும் பாடுபடுகின்றன. ஆயினும், அன்பு அங்கே! எரிச்சல் இங்கே!! ஏன்?—விடையை, தமிழகம், நன்கு அறியும்

*

விடை பெற்றுக்கொண்டாராம், ஆச்சாரியார்! அப்போது சில மெம்பர்கள், சோக பிம்பமாயிருந்தனராம். உண்மைதான்—தேனென நம்பி, தெந்தினா பாடிய, நண்பர் மாணிக்கவேலருக்கும், 'நேற்றுமுளைத்த' ஜோதி அம்மையார் போன்றோருக்கும், அவரது ராஜினாமா, திடுக்கிடக்கூடிய செய்தியாகத்தானிருக்கும். அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட அரசியல்வாதிகளல்லவா! அவர்களுக்கு, சோகமும் வேதனையும் பிறப்பது இயற்கை.

ஆனால், இந்த ஏடுகளுக்கு! அந்தப் பகுதிதான் ஆச்சரியமாயிருக்கிறது. ஆச்சாரியார், 'உடல் நலக் குறைவு' காரணமாக, இந்த இகலோகச் சுழல்களில் சிக்கித் தவிக்காமல், சாயுச்ய பதவிக்கான வழிகளைத் தேடுவதற்கு கானகம்நோக்கியோ, தனியான இடத்துக்கோ புறப்பட்டுவிடவில்லை! குற்றாலத்து முனிவராகிவிடவில்லை! குளிர்ச்சிக்குக் குற்றாலமும், அரசியல் நிகழ்ச்சிகளுக்குச் சென்னையுமாகவே, தன்னுடைய வாழ்க்கையில் ஓட்டிக்கொண்டிருக்கிறார். அதனாலேயே கவர்னர் தந்த எம்.எல்.சி. பதவியையும், ராஜினாமா செய்யவில்லை, அவர்! எனினும் ஏடுகள், 'விடை பெற்றுக்கொண்டார்!' என்பதை விதவிதமாக, வேதனை கலக்க வெளியிடுகின்றன.

ஆச்சாரியார், அரசியல் துறவு கொண்டுவிடவில்லை.

எனினும் இவைகளுக்குப் பொறுக்கமுடியவில்லை.

காரணம், அவர், முதலமைச்சர் பதவியைவிட்டு, விலகும்படி செய்யப்பட்டாராம்! அப்படிச் செய்யப்பட்டதால், 'அவருடைய சேவை நம் நாட்டுக்குக் கிடைக்காதே' என்று முகாரி பாடுகின்றன, ஏடுகள்.

கார்வேண்டும்—கனைத்துப்பேச மந்திரிப்பதவிவேண்டும்—எதிர்த்துப்பேசுவோரின் மண்டையை உடைக்க அதிகாரம்வேண்டும்—இத்தனையும்இருந்தால்தான், சேவை செய்வேன்! செப்பவில்லை, இவ்விதம், ஆச்சாரியார். விடைபெற்றுக்கொள்கிறேன், என்கிறார்! உடனேயே காங்கிரஸ் தலைவர் பண்டித நேருவின் தாக்கீது எப்படியிருக்குமோ அறியேன்—என்கிறார்!!

அரசியல் வாழ்வைத் துறந்துவிட்டதாக, அன்பர் காட்டிக்கொள்ளவில்லை. அந்த அவசியமும், அவருக்கு இல்லை, இப்போது.

ஒருபோது, தனியாளாக, இங்கிருந்து விரட்டப்பட்டார்!

இப்போது, தனியாளாக இல்லை, அவர்! சில, 'அனுமார்'களும் உள்ளனர்!!

முதலமைச்சர் பதவியினின்றும் விலக அவர் காட்டிய காரணம், உடல் நலம் குறைந்துவிட்டதென்பதாகும். 'கட்சிக்குள்ளிருப்போர் என்னை விரட்டுகிறார்கள்' என்று வெளிப்படையாகச் சொல்லமுடியுமா, அவரால்? சாதாரணர்களே,

இதுபோன்ற சங்கடங்கள் ஏற்பட்டால், முகத்தை முக்காடிட்டுக் கொள்கின்றனவே! அதிலும், ஆச்சாரியார் எப்பேர்ப்பட்டவர்? ஆஸ்திரேலிய கேசி புகழ, அமெரிக்க ஆலன் கை குலுக்க, பிரிட்டிஷ் மவுண்ட்பேட்டன் பெருமை பேச, உயர்ந்திருப்பவர். இந்தியாவின், முன்னாள் கவர்னர்ஜனரல்! அவரால், இந்த அவமானத்தைத் தாங்க முடியுமா? தாங்கிக்கொண்டாலும், ஊரும் உலகமும் கெக்கலிக்காமல் விடுமா! எனவே, 'நாசூக்கான' பாஷையில், 'உடல்நலக் குறைவு—விலகுகிறேன்' என்கிறார். வயோதிகர்! வேறென்ன சொல்வார்!! ஆனால் இந்த ஏடுகள், அவரது எதிரிகளைத் தாக்குவதுபோல, உண்மையை உலகுக்கு இழுத்துக்கொண்டு வருகின்றன. இல்லையெனில், எழுதுமா—அவரை இழந்துவிட்டோம், என்பதாக.

*

ஆச்சாரியார், தனக்கேற்பட்ட 'தோல்வி'யை மறைக்க, பெரும் முயற்சிகள் செய்துவருகிறார். ஏனெனில், முன்பெல்லாம்—எப்படியாவது இந்த எம். எல். ஏ.க்களை மிரட்டிவாழலாம் என்றெண்ணிய போது — சென்றவிடமெல்லாம் அவர் செப்பிய வாசகம், கவனத்திலிருக்கிறது. "தள்ளாதவன், நான். நமக்கேன், இத்தொல்லை என்றும் கருதுவதுண்டு. ஆனால், எதிர்ப்புகளைக் காணும்போது, எனக்கு வாலிபம் வந்துவிடுகிறது. மனக்கிலேசமோ, உடல் நலக் குறைவோ தெரிவதில்லை. உற்சாகம் வந்துவிடுகின்றது" என்று பேசியிருக்கிறார். அண்மையில் உத்திரமேரூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலும், கர்ஜித்திருக்கிறார். அப்பேர்ப்பட்டவர், இன்று விலகுகிறார்! அதற்குக் காரணமாக, 'உடல் நலக் குறைவை'க் காட்டுகிறார்!! உள்ளத்து வேதனையையும் உலகத்து ஏளனத்தையும் மறைத்துக்கொள்ள தேடிய வழி, இது. அப்படியானால், ஆச்சாரியாருக்கு, உடல்நலக் குறைவே கிடையாதா?—அவர் என்ன பீமனா?—என்று, கேட்கலாம். ஒப்புக்கொள்கிறோம், பீமன் அல்ல, அவர்! உடல் நல மற்றவர்தான்!! ஆனால், இது ஒன்றும் புதிய விஷயமல்ல. அவர் அரசுப் பொறுப்பை ஏற்றபோதும், பீமனாக இல்லை—இப்போதும் இல்லை, என்பதே நம் கருத்து. ஏனெனில், அவர், வாழ்க்கையின் இலையுதிர் காலத்தில் நிற்கும் வயோதிகர்! வாலிப முறுக்கும் துடிப்பும் உண்டென்று கூறவில்லை, நாம்.

தன்னுடைய நிலைமையை மூட, இந்த 'அஸ்திரம்' பயன்பட்டிருக்கிறது.

இதனை அறியாததுபோல், ஏடுகள், எகத்தாளம் போடுகின்றன.

விடைபெற்றுக் கொண்டாராம்!—அவர் சேவையை நாடு இழந்துவிட்டதாம்!!—அவரது சேவையின் அளவையும், வகையையும், நாடறியும். எனினும் அவர் விலகும் விஷயத்துக்கு, எதெதையோ கூறி, மக்கள் மனக்கண் முன்பு, புதுப் பிரச்னைகளை உண்டாக்கும் ஆர்வம், உதயமாவதேன், இவர்களுக்கு?

ஆச்சாரியார், கானகமேவிய புத்தராகிவிடவில்லை! அவரால், அவ்வளவு சாமான்யமாக முடியக்கூடிய விஷயமுமல்ல, அது!!

அரசியல் சதுரங்கத்தில், தான் பெற்ற இடத்தைக் காப்பாற்றிக் கொள்ள அவர் ஆடிய ஊஞ்சல்கள், பல ரகம்.

"கொல்லைப்புறவழியாக வந்தீர்"? கேட்டது, நாடு. கிலேசம் கொண்டாரில்லை.

"கொடுமை புரிகிறீர்! விலகும்!!" நல்லோர், எடுத்துரைத்தனர். நாற்காலியைவிட்டு அசையவில்லை.

"ஜனநாயகக் கொலை! நீர், அரசு பீடம் ஏறியது தவறு"—எல்லோரும் கூறினர். ஏற்றாரா? அதுதான், இல்லை!

"புதிய கல்வித் திட்டம் வேண்டாம்—நீரும் வேண்டாம்"—என்று சட்டசபையினரே மெஜாரிடியாக இருந்து முடிவு செய்தார்கள். பதவி பெரிதெனக் கருதினாரேயொழிய, அசையவில்லை.

"காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் உறுப்பினர்கள், காரசாரமாகத் தாக்கினர்" — வயதும் அனுபவமும் பெற்றோர், சகியார். ஆனால், ஆச்சாரியார், சகித்துக்கொண்டார்.

"ஆச்சாரியாரை விலக்கவேண்டுமெனக் கூறி பண்டித நேருவிடம் எம். எல். ஏ.க்கள் தூது சென்றனர்" மானபிமானப் பிரச்னையின் உச்சகட்டம், இது. விலகினாரா, வேதிய குல சிரேஷ்டர்? இல்லை!

அதற்கெல்லாம் மசியாதவர், திடீரென அரசியலைத் துறந்து, எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு போகமாட்டார் — அதிலும், ஆச்சாரியாரை, சாணக்யர் என்று, வேறு அழைப்பர்! தன்னை அவமானப்படுத்திய நந்தவமிசத்தை அழிக்கும்வரையில் அவிழ்த்த தலையை முடியமாட்டேன்—என்று, சபதம் செய்தவனும், சரித்திரத்து சாணக்யன்!!

எப்படி, அரசியலிலிருந்து விடை பெற்றுக்கொள்வார், இவர்.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் காமராஜர் நின்றாரே—அவரை எதிர்த்து நின்றவர், யார்? சி. சிப்ரமணியம்.

தலைமைப்பதவிக்கு காமராஜரைப் பிரரேபித்தது டாக்டர் வரதராஜுலு நாயுடு. ஆமோதித்தவர், அண்ணாமலைப்பிள்ளை.

ஆனால், சி. சுப்ரமணியத்தைப் பிரரேபித்து, ஆமோதித்தது யார்? ரசமான, பகுதி, இது! ஆச்சாரியாரால் மந்திரியாக்கப்பட்ட பக்தவத்சலம், பிரரேபித்தாராம்! மற்றோர் மந்திரி கிருஷ்ணாராவ், ஆமோதித்தாராம்!!

இதற்கு யார் காரணம்? ஆச்சாரியார்தான்! என்பதை, சாதாரண அறிவுள்ளோனும் கூறுவான்.

அதுமட்டுமல்ல, அன்று முதல் ஆச்சாரியாரின் இல்லம் 'சதிக்கிடங்காக' மாறிக் கிடக்கிறதாம்—அவர் வந்தார்! இவர் பேசினார்!! — என்றெல்லாம், செய்திகள் வருகின்றன. ஆயினும் ஏடுகள் கூறுகின்றன — அவரை இழந்துவிட்டோம்! — என்பதாக.

தெளிவாகச் சொன்னால், தென்னாட்டு அரசியலில் ஆச்சாரியார் புதிய இடம் பெறுகிறார்—என்றே, சொல்லவேண்டும். தனித்து நின்றவர்—இப்போது 43 பேரின், ஆதரவைத் தன்னுடைய ஆளுக்குப்பெற்றிருக்கிறார். எப்படியெப்படிப்பெற்றார், என்கிற விபரம் தேவையில்லை! எப்படியோ, பெற்றிருக்கிறார்!! அவரா, அரசியல் வாழ்விலிருந்து, விடை பெற்றுக்கொள்வார்?

ஏடுகளுக்கு இருக்கும் கோபம்

வேறு. தங்களவரை, வீழ்த்திவிட்டனரே!—எனும் தணியாத கோபம். அதனால் கொட்டு முரசை!—என்று ஆரம்பித்துவிட்டனர் பிரசாரத்தை. அதன் முதல் கட்டம், "ஆச்சாரியார், விடை பெற்றுக்கொண்டுவிட்டார்! என்ன, செய்வது? நாடு, எப்படியாகுமோ! யார் கையில் சிக்குமோ!" என்கிற பிலாக்கணம்.

இதனை சாதுர்யமாகச் செய்திருக்கிறது—'இந்து' ஏடு. காமராஜரைப்பற்றி எழுதும்போது, 'எப்படி இவர் இந்த ராஜ்ய பாரத்தை வகிக்கப்போகிறார்?' என்று பரிதாபப் படுவதுபோலத் தீட்டுகிறது. ஆச்சாரியாருக்குப்பின் வரும் ஆள், வெகு திறமைசாலியாக இருக்க வேண்டுமாம்! இல்லையெனில் ஆட்சி, அஸ்தமித்து விடுமாம்!!

காமராஜரோ — அல்லது வேறு யாரோ—அரசுக் கட்டிலில் அமர்ந்திடுவதால், தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுவிடுமென நாம் கூறவில்லை. இன்றிருக்கும் சமுதாய அமைப்பில்—காங்கிரஸ் கூடாரத்தின் சார்பில் 'அந்தக் கடவுளே' வந்தாலும், தாயகத்தின் இழிவையும் பழியையும் தீர்த்திடமுடியாது — பெருமூச்சையும், அடக்கிடமுடியாது.

ஆயினும், ஏடுகளின் போக்கை எடுத்துக் காட்ட விரும்புகிறோம். 'தங்களவர்' தவிர்த்து மற்றோர் ஆள வருகிறாரென அறிந்ததும் 'ஐயோ!' என்றலறுகின்றன. ஆச்சாரியார், போய்விட்டாரே! என்று கூச்சலிடுகின்றன. அவரது சேவையை இழந்தோமே!—என்று அங்கலாய்க்கின்றன. விடை பெற்றுக்கொண்டுவிட்டாரே! — என்று விசாரப்படுகின்றன.

ஆச்சாரியார் விடை பெற்றுக் கொண்டு, வனவாசம் போய்விடவில்லை—எனினும், எழுதுகின்றன. அவர்மாட்டு, மக்களின் அனுதாபம், திரளவேண்டுமாம்! அவ்வளவு ஆத்திரம் ஏன், ஒரு திராவிடமகன் வருகிறானென்பதைக் காணும், எரிச்சல்! இதே ஏடுகள், ஆச்சாரியார் வந்தபோது, என்னென்ன எழுதின! எண்ணிப்பாருங்கள். ✲

இது என்ன போக்கு!

"பிறர் கையை எதிர்நோக்கிவாழ்பவன், தன்னையே சாகடித்துக் கொள்கிறான்" என்றோர் பழமொழி உண்டு.

அதற்கு, அருமையான உதாரணமாக விளங்குகிறது பாகிஸ்தான்.

ஆயுதத் தளவாடம், நிதி உதவி, அத்துடன் போய்விடவில்லை — அமெரிக்காவுக்கும் அதற்கும் ஏற்பட்டிருக்கிற உறவு. எல்லாவகைகளிலும், உதவி தேவைப்படுகிறதாம், பாகிஸ்தானுக்கு! கராச்சி பார்லிமெண்டில் செப்பியிருக்கிறார், பாகிஸ்தான மந்திரியார்!! புது நாடு அமைத்த சிற்பி லியாகத் அலிகான் பொல்லாத ஒருவனால் சுட்டுவீழ்த்தப்பட்டாரல்லவா? — அந்தச்சதியைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளைத் தக்கபடி தண்டிக்க, தவறிவிட்டது, பாகிஸ்தான்!!

'இந்த வழக்கை இவ்வளவு அசிரத்தையாக சர்க்கார்விடலாமா? இதற்கு ஏதோ, காரணம் இருக்க வேண்டும் எனக் கருதுகிறேன்' என்பதாக, ஒரு உறுப்பினர், பேசி இருக்கிறார்.

பதிலளித்த மந்திரியார், உடனே, 'அமெரிக்காவை' அழைத்திருக்கிறார்.

அமெரிக்காவிலிருந்து கூட வழக்கை ஆராய அதிகாரிகளைக் கொண்டு வந்தார்களாம்! —கொலை, நடந்தது பாகிஸ்தானில்! ஆராய ஆள், அமெரிக்காவிலிருந்து!! எவ்வளவு விசித்திரம்? எவ்வளவு பெரிய தற்கொலை இது! இதனால்தான், நாம் அடிக்கடி கூறிவருகிறோம், 'அமெரிக்கா உதவி செய்கிறது என்று ஆனந்தப்படாதே — அந்த உதவி உன்னை முடவனாக்கிவிடும்' என்று. ஆனால், தேசியத்தார், கேட்கிறார்களா? ஒரு பக்கம் அமெரிக்காவை ஏசுகிறார்கள்! இன்னோர் பக்கம், 'கொடு, கடன்' என்று கேட்கிறார்கள்!!

கடந்த மார்ச் 31ந்தேதி இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறதாம்.

அதன்படி ரூ. 14 கோடி கிடைக்குமென்றும், அத்தொகையின்மூலம் சென்னைநகரில் மின்சார வசதி அதிகரிக்கப்படுமென்றும் செய்தி வந்துள்ளது.

அமெரிக்காவிடம், கை நீட்டுவதால் ஏற்படும் விபத்தினை, பண்டிதர் அறிந்துள்ள நேரம் இது. இப்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகிறது! இவ்வண்ணம் அந்நியர்கள் சகாயத்தில் வாழ்வது ஆபத்தென நாம் கூறினால், "பாகிஸ்தான் ஆயுதம் வாங்குவதால், அதனைக் கண்டிக்கிறோம். நம் என்ன ஆயுதமா வாங்குகிறோம்! பணமல்லவா! பணம்—தொழில் நிபுணர்கள் ஆகியோரை இறக்குமதி செய்வதால் என்ன கேடு?" என்று வாதிட வருவர், தேசீய நண்பர்கள். அவர்கள் பார்வைக்கு வைக்கிறோம். அவர்களால், பெரிய தொழில் நிபுணர் என்று புகழப்படும் விஸ்வேஸ்வரய்யா, கல்கத்தாவில், மார்ச் 27ந் தேதி பேசியிருக்கிறார்:-

'வெளிநாட்டாரின் ஆலோசனைகளையும் உதவிகளையும் நம்பியிருத்தல் கூடாது. எதிர்காலத்தை எண்ணி இந்தப் போக்கினை நிறுத்த வேண்டும்"

இப்படிச் செய்யவில்லையென்றால் நாமே வலையில் வீழ்வதாகுமென எச்சரித்திருக்கிறார். இதையே நாம் அடிக்கடி கூறிவருகிறோம். அண்மையில் பார்லிமெண்டில் ஒரு புகார் கூறப்பட்டது. பாதுகாப்பிலாகாவில் வெளிநாட்டார் ஒருவரை, மிகப் பெரிய பொறுப்புள்ள பதவியில் வைத்திருந்தார்களாம்—டில்லி சர்க்கார். அந்த அதிகாரி, முக்கியமான தஸ்தாவேஜுகளை எடுத்துக்கொண்டு போய்விட்டாராம்.

அந்நியர்களை அழைத்து, முலாவி, பொறுப்புள்ள பதவிகளிலமர்த்துவது, இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்படவே செய்யும்.

பாகிஸ்தானைப் பார்த்து கேலி செய்யும் தோழர்களைக் கேட்கிறோம்—ஏன், அமெரிக்க உதவி? ஏன், அங்கிருந்து நிபுணர்கள்?

★

10, 11 தேதிகளில் தஞ்சை மாநாடுகள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

பாரிகளுக்கு அவைகளை விற்பனை செய்கின்றனர்.

சில சமயம் தாகர் கையில் சிக்காமல் தறிக்காரன் நூல் வியாபாரியிடமே கடனுக நூல்வாங்குகிறான். அப்பொழுது வியாபாரியின் தயவை எதிர்பார்த்து நிற்பதால் அவனிடம் ரொக்க விலைக்குமேல் அதிகம் கொடுத்து நூலை வாங்குகிறான்.

தரகனும் இன்றி, கடனுகவும் இன்றி, ஒரு தறிக்காரன் சொந்த முதலைக்கொண்டே நூல் வாங்கினாலும், தயாரித்த சரக்குகளைத் தேக்கி வைத்து நல்ல நேரம் பார்த்து அதிக விலைக்குக் காத்திருந்து விற்பதற்குச் சக்தியற்று இருப்பதால் அவசரப்பட்டு கிடைத்த விலைக்கு விற்கிறான். இந்தக் காரணத்தால் சொந்த முதல் போட்டுத் தொழில் நடத்தும் நெசவாளியும் லாபம் அடைவதில்லை.

மலையாளப் பகுதிகளில் நெசவுக் கிடங்குகள் இருக்கின்றன. அங்கு பல நெசவாளிகளுக்கு வேலை தரப்படுகின்றது. நூல் வாங்குவதைப் பற்றியோ தயாரித்த சரக்குகளை விற்பனை செய்வதுபற்றியோ தொழிலாளிக்குக் கவலையே இல்லை. எல்லாவற்றையும் கிடங்கு முதலாளியே பார்த்துக்கொள்ளுகிறான். இந்த முறையில் நெசவாளி கவலையின்றி வாழ முடிந்தாலும் அவனுக்கு நிரந்தரமாக வேலை கிடைப்பதில்லை. சில சமயங்களில் கிடங்குகளில் வேலை இருப்பதில்லை. விற்பனையாகும் காலங்களில்தான் வேலை தரப்படுகிறது. விட்டு விட்டு வேலைசெய்வதனால் அவர்கள் எப்பொழுதுமே சந்தோஷமாயிருப்பதற்கில்லை.

பெரும்பான்மையான நெசவாளிகள் (Master weaver) என்ற நெசவு முதலாளிக்கடியில் வேலை செய்கின்றனர். தொழிலாளிகளுக்கு நூல் தரப்படுகிறது. கூலிக்காக துணி நெய்து முதலாளியிடம் தருகிறார்கள். கைத்தறித் துணிக்கு கிராக்கி இருக்கும் காலத்தில் முதலாளி அந்தத் துணியை விற்று லாபம் சம்பாதிக்கிறான். தொழிலாளிக்கு துணி விற்கும் விலையைப் பொறுத்தோ அல்லது இலாபத்தைப் பொறுத்தோ கூலி தருவதில்லை. எதிர்த்துப் பேசத் தொழிலாளிக்குத் தைரியம் கிடையாது. கிடைத்த கூலிக்கு வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறான். இந்த முறையிலும் அவனுக்கு 12 மாதங்களும் நிரந்தரமாக வேலை கிடைப்பதில்லை.

இந்தத் தொல்லைகளை கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவதனால் தவிர்க்கலாம். சென்னை ராஜ்யத்தில் நூற்றுக்கணக்கான சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி வருகின்றன

தொழிலாளிகளை ஏமாற்றிப் பணம் பறிக்கும் கொடுமை கூட்டுறவு சங்கங்களில் இல்லையென்றாலும் அவைகளில் வேறு பல சங்கடங்கள் நடைமுறையில் தோன்றுகின்றன.

கட்டுப்பாடு அதிகமாகவிருக்கும் கூட்டுறவு முறை, முற்போக்கு எண்ணமில்லாத நெசவாளருக்கு அதிகம் பிடிப்பதில்லை. யுத்தகாலத்தில் கூட்டுறவு சங்கங்களில் சேர்வதனால் சிரமமின்றி நூல் கிடைக்கும் என்பதற்காக பலர் அவைகளில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்களே தவிர கூட்டுறவு முறையில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்ததாலல்ல. அதனால் தான் யுத்தம் முடிந்தபின் செயலாற்றிவரும் கூட்டுறவு சங்கங்களுக்குப் புதிய அங்கத்தினர் சேர்ப்பதோ புதிய சங்கங்களை நிறுவுவதோ அவ்வளவு சுலபமாக இல்லை.

சங்கங்களில் அதிக கூலி கிடைத்தாலும் அங்கு லாபத்தில் தொழிலாளருக்கு பங்கு உண்டென்று தெரிந்தாலும், நூலும், மற்ற உபகரணங்களும் நியாயமான விலைக்குக் கிடைக்குமென்று அறிந்திருந்தாலும், கட்டுப்பாட்டுக்கஞ்சி அறியாமையால் அங்கத்தினர்களாவதற்கு அஞ்சுகின்றனர்.

நன்மைகள் பலவிருந்தும் கூட்டுறவு முறையில் குறைகளில்லாமலில்லை. பழைய மாதிரிகளையே தயாரித்தல், தரத்தின் மேல் அதிக அக்கரை காட்டாதது, விளம்பரம் செய்ய போதிய முயற்சி எடுக்காதது முதலிய சாதாரண குறைகள் சங்கங்களில் காணப்படுகின்றன. அத்துடன் வேறு பல பிரச்சினைகளும் குறிப்பாகக் கூட்டுறவு இயக்கத்தில் எழுகின்றன.

உதாரணமாக, சங்கத்தில் துணி விற்பனை அதிகரிக்கும்போது நெசவாளர்களுக்கு நூல் தாராளமாகக் கொடுக்கப்படுகின்றது. விற்பனை குறைவாகி துணி தேங்கிக்கிடக்கும் போது சங்கத்தில் நூல் தரப்படுவதில்லை! அதாவது விற்பனையாகும் பருவங்களில் அங்கத்தினர்களுக்கு வேலை தரப்படுகின்றது. விற்பனை இல்லாத நேரங்களில் அங்கத்தினர்களுக்கே சரியாக நூல் கொடுப்பதில்லை

விற்பனையாகும் பருவத்தில் சங்கமில்லாவிட்டாலும் கைத்தறிக்காரர் வேறெங்காவது தனிப்பட்ட முதலாளியிடமோ அல்லது சொந்தத்திலோ வேலை செய்ய முடியும், சம்பாதிக்க முடியும். ஆனால் சொந்தத்தில் தொழில் செய்வதற்கு முதல் இல்லாத நேரம், முதலாளிகளும் வேலைக்கு விரும்பியழைக்காத நேரம்

அரசியல்—சமுதாய—பொருளாதார கலைத்துறை ஏடு

முரசொலி

[வெள்ளிதோறும்]

ஆசிரியர்: மு கருணாநிதி

வார இதழ் : : விலை 2 அணா

விபரங்களுக்கு:- நிர்வாகி

"முரசொலி"

சென்னை-24.

துணிக்கு கிராக்கி இல்லாத காலத்தில், நெசவாளிக்கு வயிறு வளர்ப்பதே கஷ்டமான காலத்தில், சங்கத்திலும் வேலை சரியாகக்கிடைப்பதில்லை.

துணி விற்பனையாகாத பருவங்களில் முன்பணம் போட்டு நெசவாளருக்கு நூலும் வேலையும் கொடுத்து சரக்குகளைச் சேமித்து விற்பனையாகும் பருவத்தில் அவைகளைக் காத்திருந்து விற்பதற்கு சங்கங்களில் போதிய முதல் இல்லை. அதனால் விற்பனையாகும் காலத்தில், வியாபாரிகள் சங்கங்களில் அதிக சரக்குகள் வாங்கவரும் நேரத்தில் அங்கு போதிய சரக்குகள் கையிருப்பில் இருப்பதில்லை. துணிக்கு அதிக கிராக்கியிருக்கும்பொழுது அதிகமான நெசவாளரை வைத்து தயாரிக்கலாம் என்றாலும், அப்பொழுது துணிவிலை ஏற்றத்தால் சொந்தத்தில் தொழில் செய்தால் அதிக கூலி கிடைக்கும் என்ற ஆசையாலும், சொந்தத்தில் இல்லாவிட்டாலும் வெளியில் நெசவாளிக்குக் கிராக்கி ஏற்பட்டு யாரிடம் வேலைக்குச் சென்றாலும் அதிக கூலி கிடைக்க ஏது இருப்பதாலும், சங்கத்தில் வருஷ முழுவதும் வேலை கொடுப்பதில்லை என்ற குறை இருப்பதாலும் நெசவாளர் சங்கத்துக்கு வரப் பிரியப்படுவதில்லை.

ஆகவே தொழிலாளி வேலைதேடும் நேரத்தில் சங்கத்தில் வேலைக்குவழி இல்லை. சங்கத்தில் ஆள் தேவைப்படும்போது, நெசவாளி கிடைப்பதில்லை.

மேலும் கூட்டுறவு முறைப்படி எப்பொழுதும் ஒரே விலை என்ற கொள்கை இருப்பதால் நடைமுறையில் அதன் விளைவு விபரீதமாகமுடிகிறது வியாபாரம் இல்லாத பருவத்தில் துணி விலை எங்கும் குறைக்கப்படுகிறது. ஆனால் சங்கங்களில் விலை குறைக்கப்படாததால், சங்கத்தில் துணி விலை வெளி விலையைவிட அதிகமாயிருக்கிறது. வியாபாரம் விருத்தியான நேரத்தில் வெளியில் துணி விலை கூட்டி விற்கப்படுகிறது. ஆனால் சங்கத்தில் அதே விலையே இருப்பதால் வெளி விலையைவிட குறைவாகவே இருக்கிறது. அதனால் விற்பனையாகாத காலத்தில் விற்பனைக்கே வழி இல்லாமல்போய்விடுகிறது. விற்பனையாகும் நேரத்தில் வெளி விலையைவிடக் குறைவாயிருப்பால் வந்து குவிகிற ஆர்டரைப் பூர்த்தி செய்வது சிரமமாகிறது—நெசவாளர்கள் கிடைக்காத குறையால்.

வியாபாரிகள் சில சமயத்தில் சிறிது நஷ்டப்பட்டாலும் துணி விலையைக் குறைத்து விற்பனை செய்கிறார்கள். விற்பனைக் காலத்தில் துணியின் கிராக்கியை முன்னிட்டு அதிக விலைக்கு விற்றுவரும் இலாபத்தைக்கொண்டு முன்நஷ்டத்தை ஈடு செய்து கொள்கிறார்கள். இம்முறையில் கூட்டுறவு சங்கங்கள் செய்ய முடிவதில்லை அதனால் ஓராண்டில் சில சமயங்களில் விற்பனையே இல்லாமலும், மற்ற சமயங்களில் வரும் கிராக்கியைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையும் ஏற்படுகிறது.

குறைகளிருப்பினும் கூட்டுறவு சங்கங்கள் என்ற விதத்திலாவது ஒரு அமைப்பு ஏற்பட்டிருக்கிறதே நெசவாளருக்கு என்றுதான் நாம் திருப்தி அடையவேண்டும்.

ஏனெனில் இந்த அமைப்புக் கூட இல்லாதிருந்தால் நெசவாளரிடையே இன்றைக்கு இருக்கும் அந்த அளவு தென்புகூட இருக்காது. இந்தக் கூட்டுறவு அமைப்பாவது எல்லா கைத்தறிக்காரர்களையும் அங்கத்தினராகக் கொண்டதாக மாற வேண்டும். ஏனெனில் அவர்களிடையே ஒரு அமைப்பு அவசியம் தேவை. வெள்ளையர் இந்த நாட்டுக்கு வருமுன் இங்கே சிறப்புடன் இருந்த ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் தொழிலாளர் சங்கம் (Guiled) என்ற ஒரு அமைப்பு இருந்திருக்கிறது. நெசவுத் தொழிலாளருக்கு ஒரு தனிச்சங்கம் இருந்தது. அதில்எல்லாம்தேர்ச்சியடைந்த தொழிலாளரும் அங்கத்தினராக இருந்தார்கள். அச்சங்கம் நெசவாளிகளுடைய பிள்ளைகளுக்கு தொழிலில் தேர்ச்சி பெற உதவியும், தொழிலாளி திடீரென்று நோய்வாய்ப்பட்டாலோ, இறந்துவிட்டாலோ அவன் குடும்பத்துக்கு ஆதரவு அளித்தும், நெசவாளிக்கு நியாயமான கூலியை நிர்ணயித்தும் அதன்படி அவர்களுக்குத்தரும்படி வற்புறுத்தியும், தொழிலாளருக்குள்ளே அநாவசியமான போட்டியைத் தவிர்த்தும், சரக்குகளின் தரத்தை நிர்ணயித்தும், புதிய ரகங்களையும் மாதிரிகளையும் ஏற்படுத்தியும் நெசவாளர் சமூகத்துக்கு பெரிதும் உதவி வந்திருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சி இங்கு ஏற்பட்டுகைத்தொழில்களெல்லாம் சீர் குலைந்த பிறகு இந்த சங்க அமைப்பு முறை அறவே அழிந்துபட்டது. இன்று நெசவாளருக்கு ஏற்பட்டிருக்கும் அநேக தொல்லைகளுக்குக் காரணம் ஆலைகளின் போட்டியைவிட அக்காலத்தில் அவர்களுக்கு இருந்ததைப்போல இப்பொழுது அவர்களுக்கென ஒரு தனி அமைப்பு இல்லாததுதான். எல்லா நெசவாளருக்கும் பொதுவாக ஒரு அமைப்பு ஏற்படுத்திவிட்டால் அவர்களிடம் காணும் பல குறைகளும் தாமே மறைந்துவிடும். கைத்தறிக்காரர்களின் நலனைக் காத்துவந்த அந்தப் பழைய அமைப்பு முறை இருந்த இடத்தில் நம் கூட்டுறவு முறையையாவது எல்லாத் தொழிலாளரும் அதில் அடங்குமாறு விரிவாக்க வேண்டும். அது செய்கிறவரை கைத்தறிப் பிரச்சனை தீர்ந்ததாக சொல்லமுடியாது. இந்நாளில் நெசவாளர் சமூகத்தை எடுத்துக்கொண்டால் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருப்பவர்கள்தான் ஓரளவுக்காவது நல்வாழ்வு வாழ்கிறார்கள்.

இந்திய கூட்டுறவுப் பத்திரிகை ஜூலை—செப்டம்பர் இதழில் சென்னை கூட்டுறவு இலாகா ரெஜிஸ்திரார் அறிக்கையின்படி தற்போது சென்னை ராஜ்யத்தில் 6-லட்சம் கைத்தறி நெசவாளர் இருக்கின்றனர். அவர்களில் ஐந்தில் ஒரு பாகம் ராஜ்யத்தில் பல இடங்களில் நிறுவப்பட்டிருக்கும் 539-கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்திருக்கிறார்கள்.

கூட்டுறவு இயக்கத்துக்கு சர்க்கார் மான்யம்.

யுத்தகாலத்தில் நூல் கட்டுப்பாடு இருந்தபொழுது சங்கங்களில் சேர்ந்திருந்த தொழிலாளருக்கு 20% அதிக நூல் கிடைத்தது. முதலில் 1949-லும் பிறகு 1952-லும் நெசவாளிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக சென்னை ராஜ்ய கூட்டுறவு பாங்குக்கு ரூ 35-

லட்சம் அரசாங்கம்கடனுகக்கொடுத்தது. தன் சொந்தப் பொறுப்பில் சென்னை ராஜ்ய கூட்டுறவு பாங்க் ஒரு-லட்சரூபாய்கொடுத்தது. கூட்டுறவு சங்கங்களில் சேரவிரும்பும் ஆனால் அதற்காகப் பங்குத் தொகைக் கட்டுவதற்கு வசதியில்லாத நெசவாளருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 25 கொடுப்பதற்கும், இந்த ரூ 40-லட்சமும் உபயோகப்படுகிறது. ஆனால் இந்த 40-லட்ச ரூபாயும் எல்லா சங்கங்களுக்கும் போதுமானதாக இல்லை. 1953-ம் வருஷம் அக்டோபர் 31-ம் தேதி வரை 131-சங்கங்களில் உள்ள 61,200 தறிகளுக்கு மட்டும் இதனால் உதவி கிடைத்தது.

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர்களின் கூட்டுறவு சங்கம், சென்னை அரசாங்கத்திடம் பெற்ற ரூ 1,40,000 மான்யத்தோடும் மத்திய சர்க்கார் அளித்த 2,15,700 மான்யத்தோடும், ஈரோட்டில் விஞ்ஞான முறையில் சலவை செய்யவும் துணிகளுக்கு அச்சடிக்கவும் யந்திரங்களை 5½-லட்சரூபாயில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

இன்னும் கைத்தறிக்குப் பதிலாக விசைத்தறி என்ற சாதனத்தை நெசவாளிகளிடம் பழக்கப்படுத்துவதற்காக 400-விசைத்தறிகளை 2-லட்ச ரூபாய்க்கு வாங்கி வினியோகிப்பதற்கும் ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது. அதற்காக மத்திய சர்க்கார் ஏற்கனவே 1-லட்ச ரூபாய் உதவி அளித்திருக்கின்றனர்.

ஆலைகளில் உற்பத்தியாகும் ஒவ்வொரு கெஜம் துணியின் மேலும் காலணு உபவரி (Cess) விதிப்பதன் மூலம் மத்திய சர்க்கார் ஏறக்குறைய 5-கோடி ரூபாய் எதிர்பார்க்கிறது. அதிலிருந்து ஆந்திரா உள்பட சென்னை ராஜ்யத்துக்கு 1953-54-ம் ஆண்டுக்கு ஏறக்குறைய 147 9-லட்சரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்தப் பணத்தைக்கொண்டு மேற்கொண்டு 50,000 நெசவாளிகளுக்கு பங்குத் தொகையாகிய ரூ-25 கடனுகக் கொடுத்து கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக்குவதற்கும் வியாபாரத்தைப் பெருக்குவதற்கும் இன்னும் இதுபோன்ற மற்றக் காரியங்களையும் செய்வதற்கு திட்டமிட்டிருக்கின்றார்கள்

இத்துடன் 3½-லட்சரூபாய் செலவில் கொழும்பு, சிங்கப்பூர், பாங்காக், சிட்டகாங், ஏடன், கராச்சி, ரங்கூன் முதலிய இடங்களில் வியாபாரக் கிடங்குகள் அமைப்பதற்கும் இந்திய அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது.

மேற்சொன்ன புதுத்திட்டங்களை எல்லாம் அமுலுக்குக் கொண்டு வந்தாலும், சென்னை கூட்டுறவு இலாகா ரெஜிஸ்ட்ரார் சொல்லுவது போல "கைத்தறித் தொழிலின் பிரச்னைகள் எல்லாம் நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டுவிட்டன என்று சொல்ல முடியாது. அவைகளினால் தற்போது கைத்தறித் தொழிலில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் தற்காலிகமாகத் தீருவதற்குத்தான் ஏதோ செய்யப்பட்டிருக்கிறது"

"புதிதாக 50,000 நெசவாளிகளை கூட்டுறவு இயக்கத்துக்குக் கொண்டு வருவது என்பது இதுவரை கைத்தறிக்காரர்களிடையே ஒரு அமைப்பு இல்லை என்ற குறையை ஓரளவுக்கு நிவர்த்திக்கும்"

வெளி நாட்டு விற்பனையைப்பற்றி இப்பொழுது அரசாங்கம் எடுக்கும் முயற்சி போற்றத்தக்கது.

ஆனால் இவ்வளவு செய்தும் கைத்தறிக்காரர்களுக்குப் போதுமான நூல் கிடைப்பதற்கு ஒருவழியும் செய்யப்படவில்லை. கைத்தறிக்கே போதுமான நூல் கிடைக்காமலிருக்கும் பொழுது இந்தியாவில் உள்ள நூல் ஆலைகள் வெளிநாட்டுக்கு நூல் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுகின்றன.

அத்துடன் ஆலைகளின் போட்டியினால் கைத்தறிக்காரர்கள் படும் கஷ்டங்களை தெரிந்திருந்தும் அந்தப் போட்டியை அறவே நீக்குவதற்கோ அல்லது குறைப்பதற்கோ அரசாங்கம் ஏதும் செய்யவில்லை. சென்னை சட்டசபையின் கோரிக்கையை அதாவது கரைபோட்ட வேஷ்டிகள், சேலைகள் இவைகளைக் கைத்தறிக்கென்றே ஒதுக்குவது என்ற திட்டத்தை மத்திய சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். அது செய்யாதவரையில் கைத்தறிப் பிரச்சினை தீர மார்க்கமில்லை.

சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் 1953-ம் வருஷத் துவக்கத்தில் அமைக்கப்பட்ட ஆடைத்தொழில் விசாரணைக் கமிட்டிக்கு சமர்ப்பித்த அறிக்கையில் "சென்னை அரசாங்கம் சில ரகங்களை ஆலைகள் உற்பத்தி செய்யாமலிருந்தால் தான் கைத்தறிக்காரர்களின் குறைகள் தீரும் என்று நம்புகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்திய அரசாங்கம் இந்த அருமையான யோசனையை ஏற்கவில்லை. நெசவாலைத் தொழிலின் எதிர்கால வளர்ச்சியைப்பற்றி மிகவும் அக்கரை காட்டும் இந்திய சர்க்கார் கைத்தறித் தொழிலின் வருங்காலத்தைப்பற்றி சிறிதேனும் கவலை கொள்ளுவதாகவே தெரியவில்லை" என்று கூறியிருக்கிறது.

கைத்தறிக்காரர்கள்வாழவேண்டுமானால், அரசாங்கம் உடனடியாக சில காரியங்களை கவனிக்க வேண்டும்.

முதலாவதாக கைத்தறிக்குவேண்டிய அளவு நூல், குறைந்தவிலையில் சுலபமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நெசவாலையில் உயர்ந்த ரகத்துணி தயாரிப்பதற்கு உபயோகப்படும் மெர்ஸிரயிஸ்ட் (Mercerised) நூல் போன்றவைகள் கைத்தறிக்கும் கிடைக்க உதவ வேண்டும். இங்கே இருக்கும் கைத்தறிக்குப் போதுமான அளவு நூல் கிடைக்கிறவரைக்கும் நூல் ஆலைகள், வெளிநாடுகளுக்கு நூல் ஏற்றுமதி செய்வதைத் தடுக்கவேண்டும். தேவையானல் அந்தந்த ராஜ்யத்துக்குத் தேவையான நூல் கிடைக்க புது நூல் ஆலைகள் துவக்க வேண்டும்.

இரண்டாவதாகக் கைத்தறித் தொழில் திரும்பவும் தலையெடுக்கும்வரை, கைத்தறிக்கு வேண்டிய சில ரகங்களை தற்காலிகமாகவாவது ஆலைகள் உற்பத்தி செய்யாமல் தடை செய்யவேண்டும். சில காலத்திற்காவது போட்டியின்றி இருந்தால்தான் கைத்தறித் தொழில் சிறிது வளர வழியிருக்கும். விரும்பிய வளர்ச்சியடைந்ததும், ஆலைப்

போட்டியை சமாளிக்கும் சக்தி வந்தவுடன், போட்டியை அனுமதிக்கலாம்.

மூன்றுவதாக கைத்தறிக்காரர்களின் தொழில் முறைகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும். என்றுமே கையினால் உற்பத்தி செய்து ஆலைகளுடன் போட்டி போடுவது முடியாது. அப்படியே அரசாங்கத்தின் உதவி எப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருந்தாலும், இப்பொழுது கைத்தறிக்காரர்கள் கையாளும் முறை நீடிக்குமானால், கைத்தறிக்காரரின் வருமானம் வளராது. ஒரு ஆலைத் தொழிலாளியின் உற்பத்திச் சக்தியோடு ஒப்பிடும்போது ஒரு கைத்தறிக்காரன் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்வது 20ல் ஒரு பங்குகூட இருக்காது. இந்த நிலைமை இருக்கும் வரை, உற்பத்திச்சக்திக்குறைவினால் வருமானம் சம்பாதிக்கும் சக்தியும் குறைவாகவே இருக்கும். கைத்தறித் துணியின் விலையும் குறைவதற்கு வழி இருக்காது. அதனால் நாளடைவில் சிறு சிறு இயந்திர சாதனங்கள் கைத்தறித் தொழிலில் புகுத்தப்பட வேண்டும். ஒரு நெசவாளி தன்வீட்டிலேயே உபயோகிக்கக்கூடிய அளவிலும், அவன் சக்திக்கு அதிக விலை இல்லாததும், அவனும் அவன் குடும்பத்தாரும் அதன் நுணுக்கத்தைக் கண்டு பிடித்து அதை இயக்குவதற்குத் தக்கவாறு சுலபமானதும், அது கெட்டுவிட்டால் அதை இலகுவாக சரிபடுத்தக்கூடியதுமான சிறிய இயந்திரங்கள் நெசவாளருக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். தேவைப்பட்டால் இந்த இயந்திரங்கள் மின்சாரத்தால் ஓட்டுவது இலாபகரமாயிருக்குமானால் அதிகச் செலவில்லாமல் நெசவாளிகளுக்கு மின்சார வசதிகள் செய்து தரப்படவேண்டும். சலவை செய்தல், அச்சிடுதல் போன்ற காரியங்களுக்கு ஒரு கிராமத்திற்கு ஒன்று என்றோ அல்லது 100 தறிக்காரர்களுக்கு ஒன்று என்றோ அரசாங்கத்தாலோ அல்லது கூட்டுறவு முறையில் எல்லோருக்கும் பொதுவானதாகவோ ஒரு இயந்திரம் நிறுவப்படலாம். இவ்வித காரியங்களுக்கு ஒவ்வொரு தொழிலாளியிடமோ, வீட்டுக்கு வீடோ ஒரு விலையுயர்ந்த இயந்திரம் இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அவனவன் தன்னுடைய வீட்டில் தறியில் நெய்த துணியை எடுத்துக் கொண்டுபோய் பொதுவான ஒரு இயந்திரத்தில் சலவை செய்யவோ, அச்சிடவோ, சாயந் தோய்க்கவோ, சிறிய கட்டணத்தின் மேல் அனுமதிக்கப்பட வேண்டும். இவ்விதம் அரசாங்கம் ஏற்பாடுசெய்தால் ஆலைப் போட்டியையும் மேற்கொள்ளுவதற்குக் கைத்தறிக்கு உதவி செய்ததாகும்.

இந்த ஏற்பாடு செய்யும் வரை ஆலைப்போட்டியில்லாமல் கைத்தறியைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமை. எந்த ஒரு நாட்டிலும் போட்டியால் பிழைக்க வழியில்லாத எந்தத் தொழிலும் சாதாரணமாக அரசாங்கத்தினிடமிருந்து எதிர் பார்க்கும் உதவி.

சில காலத்திற்கு கலர்ச் சேலைகளும் கரைவேஷ்டிகளும் ஆலைகளில் உற்பத்தியாகாமல் கைத்தறியால் மட்டுமே தயாரிக்கப்படுமானால், பொதுமக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கைத்தறித் துணியையே வாங்கி ஆகவேண்டும். தொடர்ந்து இத்துணியை உபயோகித்து அதன் உழைக்கும் தன்மையை அனுபவத்தில் மக்கள் கண்டுணர்ந்தால் பிறகு பழக்கத்தின் காரணமாக கைத்தறித் துணியைத் தவிர்த்து ஆலைத்துணியை வாங்க மாட்டார்கள்.

உதாரணமாக, சென்ற இரண்டாவது யுத்தத்துக்குமுன் இந்தியாவில் தயாரிக்கப்பட்டஎழுதும் மை அதிகமாக விற்பனையாகவில்லை—வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாக்கப்பட்ட மை சுலபமாகக்கிடைத்தகாரணத்தால் பார்க்கர் இங்க், ஸ்வான் இங்க், முதலியவைகளே படித்தவர்களால் அதிகம் உபயோகிக்கப்பட்டது யுத்தம் வந்ததும்வெளிநாட்டு மை இங்கு வருவது தடைப்பட்டது. இடைக்கால காரணத்தால் வேறுவழியின்றி உள்நாட்டு மை பேனாக்களுக்கு உபயோகிக்கப்பட்டது. அப்படி இந்தியாவில் தயாரித்த மையை உபயோகப்படுத்தினால் உடனே பேனாக்கள் கெட்டுவிடும் என்ற பயம் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் நிர்ப்பந்தத்தினால் உள்நாட்டு மை பேனாக்களுக்கு உபயோகிக்கப்பட்டபோது அதனால் பேனா கெட்டுவிடவில்லை. வெளிநாட்டு மையைப்போல் அவ்வளவு நன்றாகயில்லாவிட்டாலும், பரவாயில்லை என்ற எண்ணம் எல்லோரிடையேயும் பரவியது.

யுத்தத்திற்குபின்சுதந்திரசர்க்கார் ஏற்பட்டதும் இந்தியாவில் புத்துயிர் பெற்றிருந்த இங்க் தயாரிக்கும் தொழிலைக் காப்பாற்றுவதற்காக வேண்டி வெளிநாட்டு இங்க் இறக்குமதிக்கு அதிகவரி விதிக்கப்பட்டது. வெளிநாட்டு மையின்விலை அதிகரித்தது. அதனால்பொதுமக்கள் என்ன விலையானாலும் வெளிநாட்டு மைதான் தேவைஎன்று ஒருகாலத்தில் நினைத்தவர்கள் இப்பொழுது நம்நாட்டு மைக்கு என்னகெடுதல் என்று நினைக்கும் நிலை ஏற்பட்டு உள்நாட்டு மை தயாரிக்கும்தொழில் இன்று நல்லமுறையில் முன்னேறுவதற்கு முடிந்தது.

இதைப்போலத்தான் கொஞ்சநாளைக்காவது கைத்தறித் தொழிலுக்கு பாதுகாப்பளித்து அதுசிறிது வளர்ச்சியடையவும், பொது மக்களுக்கு அதனிடம் ஒரு அபிமானம் ஏற்படவும் அரசாங்கம் உதவிசெய்ய வேண்டும். அந்த நிலை ஏற்பட்டவுடன் போட்டியை அனுமதிக்கலாம். அதற்குள்ளாக ஆலைப் போட்டியை சமாளிக்கக்கூடியசக்தி கைத்தறித் தொழிலுக்கு வந்துவிடும் என்று எதிர்ப்பார்ப்பதில் ஒன்றும் தவறில்லை.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.